Reg. No. M. 3066. 1938.

"PAHUTHARIVU"

(REASON)



பகுதி 1.

பகுதி 4.

பகுதி 7.

பகுத்தறிவு

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைதகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதார் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய ஸூட்டவணை பக்கம்.

தீண்டாமை விலக்கு பாட்டு (க. ராஜகோபால்)	1
விஞ்ஞானப் பிரவேசம் (ஜோசப் மெக்காபே)	3
உண்மை உணர்தல் (ச முரு. பிள்ளை)	11
ஜெக்கோஸ்லவேகியா பூர்வீக வரலாறு	15
அடுத்த உலக யுத்தம் (எஸ்ஸன் ராய்)	26
முன்னேற்றத்துக்கு முதலாளி மூட்டுக்கட்டை (ஆ. கோபிக்நாதபிள்ளை)	34
கூட்டுறவு வாழ்க்கை (ஈ. வெ. ரா)	40
வாணிபப்பழம் (புதுமைச் சாதகன்)	51
தமிழர் செய்ய வேண்டிய வேலை	54
காங்கிரஸ்மென்றால் என்ன?	61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என உடையரேனும் இலர். (திருவள்)

மலர் 4 | ஈரோடு 1938 நவம்பர் 1 | இதழ் 7.

தீண்டாமை விலக்கு.

(கோலாலம்பூர் க. ராஜகோபால்)

(செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற மெட்டு)

தீண்டாமையே இனி வேண்டாமென்றே—ஒரு
திட்டங்கொண்டேயதை போட்டிடுவோம்
ஆண்டாண்டாயுள்ள வடிமை யொழியவே
ஆண் பெண்ணனை வருங்கூடிடுவோம் (தீ)

தன்னலமே பெரிதாகக் கொண்டு—சிலர்
தாரணியில் செய்யுந் தீங்கொழிப்போம்
தண்ணினத்தில் பலர்க் கிட்ட தெருங்கிடத்
தகாதென்ற பட்டம் போக்கிடுவோம். (தீ)

ஜாதி சமயங்கள் யாவும் உலகினில்
ஜனனத்தில் கண்டோர்கள் யாருமில்லை
பாதியில் சோம்பேறிக் கூட்டங்கள் செய்திட்ட
பாதகமென்றதைப் போக்கிடுவோம் (தீ)

மனுவி லுயர் வெனுக்தாழ்வாக—இத்த
மானிலத்திலெங்கும் இல்லை காண்பீர்
மக்களிலனைவர் தக்க வறிவின்றி
மதியிழக்த வாழ்வ துண்மை யொன்றே (தீ)

இந்தியாவிலுள்ள நீண்டாமை—இனை
என்று ஒழிப் போமோ அன்று முதல்
இன்பமயமே நிலவிடுமே யெங்கும்
எழைவதுமை யொழிக்திடுமே (தீ)

எழை எளியவர் இல்லங்களிற்சென்று
இயன்ற உதவிகள் செய்திடுவோம்
கோழையாயிங்குள்ள கொள்ளைக் கூட்டங்களை
குழிவெட்டி யாழத்தில் தள்ளிடுவோம் (தீ)

கண்றேனக்கண்டதை காடிடுவோம்—புவி
காசங்கள் யாவையும் போக்கிடுவோம்
கண்பன் காஜகோபா லன்புடன் கூறுஞ்சொல்
கன்மை யென்றே கும்மிப் பாடிடுவோம், (தீ

தன் உண்மையான அபிப்பிராயங்களைக் கூற ஒவ்வொரு வனுக்கும் மனோதைரியம் வேண்டும். உண்மையை அறிகிற வர்களும் அதை வெளியிட்டு உலகம் முழுவதும் பரவச் செய்ப வர்களும் பொது ஜனோபகாரிகளாகிறார்கள்.

இங்கர்சால்

உண்மையான அபிப்பிராயங் கூறுகிறவர்களைத் தடுப்ப வர்கள் காகரிகத்துக்கும்—மனித சமூகத்திற்கும் சத்துருக்க ளாவர்: தன் அபிப்பிராயங்களைத் தடையின்றிக் கூறத் தான் உரிமையுண்டென்றும் மற்றவர்களுக்கு இல்லையென் றும் கூறுபவன் மிக்க ஆணவமுடையவனே.

இங்கர்சால்

விஞ்ஞானப் பிரவேசம்

(ஜோசப் மெக்காபே.)

பரிணாமமும், பொதுவாய் விஞ்ஞானமும் புரட்சியில் ஒரு பகுதியாகும் பரிணாமத்தைப் பள்ளிக்கூடங்களிலிருந்து எடுத்துவிட்டால் புரட்சி தடுக்கப்பட்டு கிறிஸ்துமதம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை மிகவும் தப்பானது. விஞ்ஞானத்தின் உதவியின்றியே நவீன நாஸ்திகத்திற்கு அஸ்திவாரங்கள் இருக்கின்றனவென நாம் கண்டிருக்கிறோம்.

பேனி, வால்டேர், இங்கர்சால் முதலியவர்கள் செய்த பைபிளின் சாதாரண தர்க்கப்பரிகூடி இருக்கிறது. ஆகி கர்த்தாக் கொள்கையினர் அமெரிக்கப் பள்ளிக்கூடங்களிலிருந்து விஞ்ஞானத்தை எடுத்து விடுவதில் வெற்றி பெற்றால் அமெரிக்காவின் இருபதுலட்சம் குழந்தைகளை கையிலும் வால்டேர், பேனி, இங்கர்சால் இவர்கள் எழுதிய பைபிள் கைப்புத்தகத்தைக் கொடுப்பதற்கு விசேஷ பிரசாரவேலையை ஆரம்பஞ் செய்யும்படி நான் எடுத்துச் சொல்லுவேன். அப்புத்தகங்களைப் படித்து அமெரிக்கப் பையன்கள் எப்படிச் சிரிப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

பிறகு சரித்திரம் இருக்கிறது. அது மனிதச் சரித்திரத்தின் தெய்வீக கடப்புகளை விலக்கிவிடுகிறது. வேடிக்கையாகப் பேசும் ஒரு பிரஞ்சுக்காரர் "விஞ்ஞானம் கடவுளைத் தான் எல்லைப்புறம்வரையில் அழைத்துச்சென்று இவ்வளவு காலம் அவர் செய்துவந்த சேவகத்திற்கு வந்தனமும் செய்து விட்டது" என்று கூறினார். தற்கால சரித்திர விஷயத்திலும் அப்படியே சொல்லலாம். அமெரிக்காவில் சரித்திர ஆசிரியர்கள் எல்லாம் விஞ்ஞானிகளைப் போலவே மதப்பற்றில்லாதவர்களாயிருக்கிறார்கள் என்று விசாரணையால் தெரிகிறது.

சமுதாயக்காரர்கள், சில சாசன ஆராய்ச்சிக்காரர்கள் தத்துவ சாஸ்திரிகள் ஆகிய யாவரும் ஒரே கூட்டத்தினர். அடிப்படையான மத நம்பிக்கையும் இவர்களிடம் கிடையாது. புரோபசர் ஆஸ்பர்ன்தானும் வேறு கியாதி பெற்ற ஒரு டஜன் விஞ்ஞானிகளுமே ஆயிரம் விஞ்ஞானிகளுக்கு கிறிஸ்தவர்களாக இருப்பதாகப்பெருமை பேசிக்கொள்கிறார்கள். அவரால் அதே பிரபல்யமுள்ள ஒரு டஜன் சரித்திர ஆசிரியர்களையோ சிலாசாசன ஆராய்ச்சியாளரையோ தத்துவ சாஸ்திரிகளையோ காட்டமுடியாது. காளைக்கு விஞ்ஞானத்தையே விலக்கி விடும். அப்பெரியார்கள் வேலை கடைபிற்றுக்கொண்டுதானிருக்கும். சிலாசாசன ஆராய்ச்சிக்காரர் "ஜீனிஸிஸ்" என்னும் முதல் புத்தகம் பழங்காலத்துக் கட்டுக்கதை என்று ருசுப்படுத்துகிறார். சரித்திர ஆசிரியர் மனிதனுடைய ஒழுக்கமும், மதாபிவிருத்தியும் கடவுள் சம்பந்தமின்றியே மேற்சென்றிருக்கின்றன வென்கிறார். சமுதாயக்காரர் மதக் கோட்பாடுகளின் செல்வாக்கை வெகு அசட்டையாகவும், அனாவசியமாகவும் கொள்ளுகிறார். தத்துவ சாஸ்திரி கடவுளைப்பற்றிய நியாய வாதத்தையும் நித்தியத்தைப்பற்றிய வாதத்தையும் அடியுடன் வெறுத்துத் தள்ளுகிறார்.

ஆயினும் மனோசக்தியில் ஆதிக்கம் பெற்றது விஞ்ஞானம் தான். புதிய உண்மைக்கும் பழைய பாரம்பரியத்திற்கும் நடக்கும் போராட்டத்திற்கு அடையாளமாயிருப்பதும் விஞ்ஞானம்தான்.

அதையாரும் சுலபமாய்த்திதரிந்து கொள்ளமுடியும். விஞ்ஞானம் கட்சத்திரங்கள், பூக்கள், குன்றுகள், மிருகங்கள், உடல் உறுப்புகள் பொருளின் அணுக்கள் முதலியவைகளைப் பற்றி உலகம் முழுவதும் கேட்டுக் கைகொட்டிப் பாராட்டும் கவர்ச்சியுள்ள விஷயங்களை வெளியிடுகின்றது. விஞ்ஞானம் அது வெளியிடும் உண்மைகளை ருசுப்படுத்துகிறது. அவ்வுண்மைகளுக் கேற்ப சிற்பம், ரசாயனம் முதலியவைகளில் அற்புதச்செயல்களை உண்டாக்குகிறது. ஆகவே விஞ்ஞானக் கொள்கைகளில் உண்மையை யாரும் சந்தேகிக்கமுடியாது. விஞ்ஞானம் எக்காலத்தும் மனிதனுடைய மனோபலத்தின் பெரிய வெற்றிக்கு அடையாளமாகும். ஆதலால் விஞ்ஞானி மதத்திற்கு விரோதமாகப் போராட்டத்திற்கு இறங்கினால் அவன் சரித்திர ஆசிரியன் அல்லது தத்துவ சாஸ்திரியைவிட அதிகமாக மக்கள கவனத்தை வசீகரிப்பான்.

ஆகிகர்த்தாக் கொள்கையினர், "ஆம், நாம் அதை ஒப்புக் கொள்ளுகிறோம். உண்மையான விஞ்ஞானம் மிகப்பெரிய சக்திதான் என்று நாங்கள் தெரிந்துகொண்டிருக்கிறோம்" என்று கூறுகிறார்கள். எப்போது விஞ்ஞானம் உண்மையாக இருக்கிறது என்றும், எப்போது அது உண்மையாக இல்லை என்றும் யார் சொல்லுகிறது? உலகத்திலுள்ள எல்லா விஞ்ஞான நிபுணர்களும் லட்சத்திற்கும் அதிகமிருப்பார்கள். அவர்கள் பரிணாமம உண்மையான விஞ்ஞானம் என்று ஓருமிக்க ஒப்புக்கொண்டிருக்கையில், தனக்கே அதிகமாகத் தெரியுமென்று சொல்ல வேறு எந்த மனிதனுக்குத் தைரியம் வரும்?

விஞ்ஞானிகள் பரிணாமத்தின் எந்தப்பிரத்தியேக வழியையும் ஒபபுக்கொள்வதில்லை. பரிணாமத்திற்கு உபயோகிக்கப்படும் எல்லா நியாய வாதங்களின் மதிப்பையும் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை ஆனால் உலகத்திலுள்ள சர்வகலாசங்கங்களில் பரிணாமம் சம்பந்தமான ஏழு அல்லது எட்டு விஞ்ஞான சாஸ்திரங்களில் பேராசிரியர்களாயிருப்பவர்கள் எல்லாரும் பரிணாமம் என்பது உண்மைதான் என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதற்கான சில நியாயவாதப் போக்கும் உண்மையான விஞ்ஞானம்தான் என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒரு டாக்டர் ரீவி, அல்லது ஒரு ரெவரெண்டு ஸ்ட்ராட்டன், அல்லது ஒரு மெக்ரீடிப்ரைஸ் என்பவர் இப்பெரிய சாட்சியங்களுக்கெதிராய் எழுந்து தனக்கு அதிகம் தெரியும் என்று சொல்லுகிறார். இது ஒரு வேடிக்கையான விஷயமாக இருக்கிறது. மெக்ரீடிப்ரைஸ் என்பவர் ஐந்து வருஷங்களாக இங்கிலீஷ் இலக்கியப் போதகராக இருந்தார். அமெரிக்காவில் ஒரு எழிய சர்வகலாசங்கத்திலும் அவருக்கு ஒரு ஆசிரியஸ்தானம் கிடைக்கவில்லை. விஞ்ஞானப்படிப்பற்ற உபாத்தியாயர்கள் உலக விஞ்ஞானக் கூட்டத்தார்களைவிட உண்மையில் அதிகமாகத் தெரிந்தவர்கள் என்றும், அவர்களை விஞ்ஞானிகளைக் கவலப்படுத்த முடியுமென்றும், அமெரிக்காவில் லட்சக்கணக்கானவர்கள் நினைப்பது விசனகாமானதாக இருக்கிறது.

"பிராணி வர்க்க உற்பத்தி" என்னும் டார்வின் வெளியீடு பாவ ஆரம்பித்த கால முதல் விஞ்ஞானத்திற்கும், மதத்திற்கும் போராட்டம் ஆரம்பித்தது. அப் புத்தகத்தின் முழுப் பெயர் "இயற்கைச் சேர்க்கையின் வழியாய் பிராணி வர்க்க

உற்பத்தி'' என்பதாகும். டார்வின் கொள்கைக்கும் உண்மையான அர்த்தம் அதுதான். டார்வின் கொள்கைக்கும் பரிணாமத்திற்கும் வித்தியாசம் உண்டு. அது பரிணாம இயக்கத்தின் தனிப்பட்ட ஒரு பிரத்தியேகமான சித்தாந்தம். அதற்கு எதிர்ப்பும் இருக்கிறது. டார்வின் கொள்கையையும், பரிணாமத்தையும் குழப்பி எழுதியும் பிரசங்கம் செய்தும் வருகிறவர்கள், அவ்விரண்டும் ஒன்றே என்று காட்டுகிறார்கள். விஞ்ஞானிகள் பரிணாமத்தை ஒப்புக்கொள்ளாதது போல விஞ்ஞானிகள் டார்வின் கொள்கையை எதிர்க்கிறவர்கள் என்று சொல்லுகிறவர்கள் ஆகிய யாவரும் தங்களைப் பின்பற்றுகிறவர்கள் கண்ணில் மண்ணை வாரிப் போடுகிறவர்களாவார்கள். கீழ் அமெரிக்காவில் இது விஷயத்தில் அறியாமை வெகு அதிகமாக இருக்கிறது.

டார்வினுக்கு விஞ்ஞானத்தில் இருந்த பெரிய மதிப்பும் அவன் மதத்திற் கிழைத்த பெரிய குற்றமும் என்னவென்றால் அவன் பரிணாம சித்தாந்தத்தை முதன் முதலாக மக்களுடைய கவனத்திற்குரிய உண்மைகளின் பேரில் ஒரு முறையில் வெளியிட்டதுதான். அந்த சித்தாந்தம் அவனுடைய காலத்திற்கு முன்பே படிப்பாளிகளுக் கெல்லாம் தெரிந்தே இருந்தது. ஆனால் ஆரம்பத்தில் அது பெரிய உண்மைகளைப்பற்றிய அஸ்திவாரம் இல்லாமல் வெறும் நிதர்னத்தைப்பற்றியே இருந்து வந்தது. டார்வின் இது விஷயமாக முப்பது வருஷம் அமைதியாய், உழைத்துப்பின்பு அதற்கான அஸ்திவாரத்தை அமைத்தான். உலகம் பரிணாமத்தைப்பற்றி விவகரிக்க ஆரம்பித்துவிட்டது. பெரிய சண்டையும் ஆரம்பமாயிற்று.

ஆரம்ப காலத்தில் விஞ்ஞானிகளுக்கும், மதாபிமானிகளுக்கும் சிறு சிறு சண்டைகள் நடந்து வந்திருக்கின்றன. மனிதன் உண்டாகி ஆறு ஆயிரம் வருஷங்களே ஆயின வென்று பைபிள் விளக்கமாய்க் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் இது காணப்படவில்லை என்று சாமானியமாய்க் கூறுகிறவர்கள் உற்பத்திக் கால ஆரம்பத்தில் இருந்த ஆதிம் பத் தலைவர்களுக்கு ஏற்பட்ட வயதுகளை ஒன்றாய்ச் சேர்க்க வில்லை. இப்புள்ளிகளைச் சேர்த்தால் ஆதாம் உண்டாக்கப் பட்டது, கிறிஸ்து பிறக்க சுமார் 4000 வருஷங்களுக்கு முன்பாகும். இங்கிலாந்தின் பாதிரிகள் உலகம் படைக்கப் பட்ட சரியான தேதியையும் மணியையும் குறிப்பிடும்போது

அவர்கள் பாராட்டிற்குரியவர்களாவார்தான்! டார்வினுக்கு வெகு காலத்திற்கு முன்பே விஞ்ஞானிகள் சரித்திர காலத்திற்கு முன்பிருந்த கல் ஆயுதங்களைக்கண்டுபிடிக்க ஆரம்பித்தார்கள். அக்காலம் பத்தாயிரக்கணக்கான வருஷங்கனுக்கு அப்பால் செல்லுகிறது. ஆகவே மனிதனுடைய உற்பத்திக் காலத்தைப்பற்றிச் சண்டை உண்டாயிற்று.

பேபல் கோபுரத்தைச் சுற்றியும் பாஷைகளின் குழப்பத்தைப்பற்றியும் மற்றொரு சண்டை உண்டாயிற்று. பதினான்பதாவது நூற்றாண்டில் பாஷா சாஸ்திரம் விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாக இருந்தது. ஐரோப்பியர்கள், இந்துக்கள், பெர்ஸியர்கள் ஆகியவர்களின் பாஷைகள் ஒன்றிற்கொன்று நெருங்கிய சம்பந்தம் பெற்றிருந்தனவென்று விஞ்ஞானிகள் கண்டார்கள். பிராணிகளின் விருத்தி முறை அறியப்படுவதற்கு முன்பே பாஷைகள் விருத்தியடைந்திருந்தன. பேபல் கோபுரச்சரித்திரம் தள்ளிவிடப்பட்டது.

பூகர்ப்ப சாஸ்திரம் என்று ஒன்றுண்டு. டார்வினுக்கு வெகு காலத்திற்கு முன்பே அந்த நூல் பிரளயக்கதையை மறுத்தது. அது சென்ற லட்சாதி லட்சம் வருஷங்களாகக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பூமி கடினமாகிக்கொண்டு வந்ததாகக் கற்பித்தது. டார்வின் காலத்திற்கு முன்பே சண்டை அதிகமாக இருந்தது. ஆனால் டார்வின் காலத்தில் தான் மக்களின் கவனம் அதில் அதிகமாகச் சென்றது. ஆனால் தத்துவ சாஸ்திரமும் சரித்திரமும் செய்தது போல டார்வின் சாஸ்திரத்தின் அடிப்படைக்குச் செல்ல வில்லை.

இன்றைக்கும் பரிணாம வாதிகளுக்கும் ஆக்கர்த்தா கொள்கைகாரர்களுக்கும் சண்டை அதிகமாக இருக்கிறது. அது "ஜீனிவிஸ்" என்னும் முதல் புத்தகத்தை ஆதரிப்பதற்காகும். அது தவறுதலான ஒரு ஆதரிப்பாகும். சரியான கல்வி அறிவு பெற்ற மதாபிமானிகள் ஒவ்வொருவராலும் வெகுகாலத்திற்கு முன்னமேயே அது விடப்பட்டது. பண்டைக்கால பேபிலோன் சரித்திரத்தின் தொகுப்பு என்று ஒவ்வொரு படிப்பாளியாலும் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கும் விஷயத்திற்காக லட்சாதி லட்சம் அமெரிக்கர்கள் சேர்ந்து சண்டை செய்வதென்றால் அது வேடிக்கையான விஷயம் தான். இவ்விஷயத்தைப்பற்றி யதார்த்தமாகவே தெரியாதிருக்கும் ஆஸ்திகர்களுக்கு உண்மையைத் தெரிந்து கொள்

ஞும் காலம் வரும். அப்போது அவர்கள் பரிணாமம் கட வுளை மறந்து விடுகிறது என்ற கூப்பாட்டோடு நின்றுகொள் வார்கள்.

இது உண்மைதான். இதை மறுக்கும் அதிமரிக்க விஞ் ஞானிகளுக்கு மரியாதை கிடையாது. ஆனால் ஆஸ்திகர் களுக்கு அவ்வாறில்லை. சரித்திரம் கடவுளைப்பற்றிச் சொல் வதில்லை. அதே போல அது காஸ்திகத்தை நிறுத்திக் கொண்டு போகிறது. வான சாஸ்திரமும், அப்படியே செய்கிறது. லாப் லேஸ் என்னும் வான சாஸ்திரியை நெப்போலியன், அவரு டைய வான சாஸ்திரத்தில் கடவுள் எங்கே இருக்கிறார் என்று கேட்டதாகவும் அதற்கு அவர் தான் கடவுளென்றவை எது வும் இல்லாமலே தனது நூலை முடித்ததாகவும் சொல்லப் படுகிறது. அக்கதை உண்மையென்று தோன்ற வில்லை. ஆயி னும் அது நவீன வான சாஸ்திரத்தின் நல்ல விளக்கமாகும். பூகர்ப்ப சாஸ்திரப் புத்தகங்களில் காஸ்திகத்தைப் பரிணாமம் அவ்வளவாக ஆதரிக்க வில்லை. விஷயத்தின் பக்குவமற்ற நிலைமையையும் பயங்கரமான கொடுமையையும், இரத்தப்பெ ருக்கும், வீண விரையமும், அபிப்பிராய மத்தழும் கோடிக் கணக்கான வருஷங்களாக இருந்து வந்தன. இவைதான் காஸ்திகத்தை வளர்க்கலாயின. உள்ளது சிறதல் என் னும் பரிணாமத்தை விலக்கி விட்டாலும் இவ்விஷயங்களின் பலன்களிலிருந்து தப்பமுடியாது.

ஆனாலும் பரிணாமத்திற் கேற்பட்ட எதிர்ப்பினால் உலக அபிப்பிராயம் தாக்கப்பட்டது. நூற்றைம்பது வரு ஷங்களாக பகுத்தறிவு இயக்கம் இருந்து வருவதால் உலகம் அதற்குத் தயாராகவே இருந்தது. கல்வி அபிவிருத்தி, படிப் பின் மலிவு, தொழிலாளர்களின் அதிகமான ஓய்வு, அவர் களுடைய அதிகப்பட்ட கூலிகள் ஆகிய சௌகரியங்கள் பத் தொன்பதாவது நூற்றாண்டில் உண்டாயின. இவைகளால் புதிய மகாஜனங்கள் உண்டாகலானார்கள். மத்தியிடத்தில் புதிய அறிவு வளரலாயிற்று விஞ்ஞானம் வெகு நன்றாய்ப் பிரகடனஞ் செய்யப்பட்டது பாதிரிகளின் சுழுதாய ஓழுக் கத் தவறுதல் காரணமாக அவர்கள் எதிர்க்கப்படுவதை ஜனங் கள் ஆதரித்தார்கள். இங்கிலாந்தில் ஹக்ஸ்லியும், ஜெர்மனி யில் ஹாக்கெலும், டார்வின் கொள்கையை எடுத்து, அதை மனிதனுக்குச் சம்பந்தப்படுத்தி ஆராய்ச்சி செய்தார்கள். உலகம் மிகுந்த பரபரப்பை அடைந்தது.

பேபிலோன்கட்டுக்கதைகளைக் கண்டுபிடித்த சிலாசாசன ஆராய்ச்சி பைபிலுக்குத் தீங்குவிளைத்ததுபோல வேறு எதுவும் செய்யவில்லை. அதுவெறும் கற்பனையல்ல. அதிலிருந்து ஆதிகாலத்தை கொள்கையினர் அனைகளைப்பற்றி ஒன்றும் கேள்விப்படாதவர்கள் போலவே தோன்றுகிறார்கள். ஆனால் "உள்ளது சிறத்தல்" என்னும் பரிணாமக் கொள்கையால் ஏற்பட்ட பலன் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. மனிதன் கீழான பிராணியிலிருந்து உயர்ந்தவன் என்றால் ஆத்மாவுக்கு அதிகமான இடமில்லை. உயிரின் அபிவிருத்தி அவ்வளவு மெதுவாகவும், அவ்வளவு தடைபட்டதாகவும், இரத்தச் செலவுக்குட்பட்டதாகவும் இருக்கால் மனமானது கடவுளை அதிலிருந்து விலக்கிவிடவே எண்ணக்கொண்டது. ஹக்ஸ்லேயுக்கு தாஸ்திகம் என்ற வார்த்தையில் விருப்பமில்லை. நாஸ்திகம் என்றால் பெரிதுவாய்க் கடவுளே இல்லை என்று அர்த்தம் எனக் கருதப்படுவதால், வேறுவழியில் அதை ருசுப்படுத்தவும் முடியாதிருப்பதால், அவர் "அக்னாஸ்டிக்" என்ற வார்த்தையைக் கற்பித்தார். அதாவது மனிதனுக்குக் கடவுள் இருக்கிறாரா என்ற விஷயம் தெரியாதது என்பதாம். அல்லது கடவுள் இருப்பது ருசுவாகவில்லை என்று அர்த்தம. எல்லாக் காலத்திலும் படிதாதமக்கள் நாஸ்திகம் என்ற வார்த்தையை உபயோகிக்கப் பின்வாங்குகிறார்கள். அவர்கள் அக்னாடிஸம் என்னும் வார்த்தையை சாதாரணமாய் உபயோகிக்கிறார்கள். ஜெர்மனியில் ஹாக்கெல் "மானிஸ்ட்" என்ற வார்த்தையைக் கற்பித்தார். அவ்வார்த்தைக்கு ஏகசக்தி ஞானவாதம் என்பதாகும். அவ்வார்த்தையை எட்சக்கணக்கானவர்கள் உபயோகிக்கிறார்கள்.

இப்படியிருக்க "உள்ளது சிறத்தல்" என்னும் பரிணாமக் கொள்கை உலகமெங்கும் பரவலாயிற்று. மான சாஸ்திரம் முன்னேற்றம் அடையவே உலகங்களை "உள்ளது சிறத்தல்" என்னும் விதிப்படியே இயங்குகின்றன என்பது உண்மை மிகவும் விளக்கமாயிற்று. சரித்திர காலத்திற்கு முந்திய மனிதனுடைய வாழ்க்கை விஷயசாஸ்திரத்தால் உலகமுழுவதும் ஆயிரக்கணக்கானவர்கள் தோன்றி அதைப்பற்றி சிந்தனை செய்யலானார்கள். லட்சக்கணக்கான வருஷங்களாக மனிதன் பரிணாம விதிக்கு உட்பட்டே வந்திருக்கின்றான் என்பதற்கு ஏராளமான சாக்ஷியம் ஏற்பட்டது. பூகர்ப்ப சாஸ்திரம் வாழ்க்கைச் சரித்திரத்தின் அநேக குறைகளைப் பூர்த்தி செய்தது. இவ்விஷயங்களைப் பொது ஜனங்களுக்

குக் காட்ட ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் காட்சி சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. நீங்கள் பெரிய காட்சிசாலை முழுவதும் அலைந்து கவனித்துப் பார்த்தால் "உள்ளது சிறத்தல்" என்னும் இயற்கை விதி வெறும் சித்தாந்தம் அல்ல வென்று தோன்றும். காட்சிசாலைப் பொருள் ஒவ்வொன்றிலும் அவ்விதியின செயல் காணப்படும்.

சமுதாயக்காரர்கள் சமுதாய ஸ்தாபனங்களையும் அரசியல் ஸ்தாபனங்களையும் பரிணாமத்தின்படி அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தார்கள் பல மத ஆராய்ச்சி நிபுணர்கள் உலக மதங்களையெல்லாம் பரிணாம விதிப்படி ஒன்று சேர்த்தனர். அவேற்பாட்டில் கிறிஸ்து மதமும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஒழுக்க நியதிகளும் பரிணாமத்தால் தான் ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளின் உற்பத்தியும் வளர்ச்சியும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டன. மனிதனுடைய மனதிற்குத் தெரிந்த ஒவ்வொன்றும் பரிணாமத்தின் பலனே யென்றும் இன்றைக்கும் பரிணாமநிலை இருந்து வருகிறது என்றும் உண்மையில் ருசுவாய்விட்டது.

இப்பொழுது இருப்பனவையெல்லாம் வெறும் தோற்றமேயாகும். இயங்கும் படக்காட்சி மத்தியில் நின்று போனால், அதைக் காண்போர் கண் முன் ஒரே படம் சலனமின்றி யிருக்கும். உலக விஷயத்திலும் அப்படித்தான் என்று காண்கிறோம். அது முடிவில்லாமல் நீண்ட ஒரே படம். விந்தியாசமுள்ள லட்சக்கணக்கான மற்ற படங்கள் முன்னமேயே சென்றுவிட்டன. இனியும் அதேக லட்சம் படங்கள் தொடர்ந்துவரும். ஆனால் காலத்தின் ஆதிம் படம் ஒரு தலைமுறை ஒரே ஒரு படத்தை மட்டும் பார்க்கக்கூடியபடி அவ்வளவு மெதுவாய்ச் சுழலுகிறது.

பழைய காலத்துப் படங்கள் பள்ளைக் காலப் போரறிவாளர்கள் கனவிலும் கண்டறியாத மிகப் பெரிய விஷயத்தைப்பற்றியதாக இருந்தன. ஆரிஸ்டாட்டில் அல்லது ஹர்க்கிமிடிஸ் தெரிந்த விஷயங்களைக் காம் அறிந்திருக்கும் விஷயங்களோடு ஒத்துப் பார்க்கையில் அவர்கள் அறிந்தது குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் ஆரம்ப வரைகப் புத்தகத்தை ஒத்திருந்தது. விஞ்ஞானம் அநுபவத்தில் வாழ்க்கை மரற்றங்களை உண்டாக்கும விஷயம் உலகத்திற்குத் தன் உண்மையான சக்தியைக் காட்டிற்று. இந்த விஞ்ஞானிகள் விஷயங்களைக்

உண்மை உணர்தல்

(கல்வி ஆசிரியர்: சு மு. பிள்ளை எழுதியது)

மனிதன் தன் குழந்தைப் பருவத்திலிருந்து இறக்கும் வரை எத்தனைய கொள்கைகளில்—நடபிக்கைகளில்—எண்ணங்களில் வாழ்ந்து வருகின்றான்? அவன் அவற்றைப்பற்றித் தன் வாழ்நாட்களில் ஒரு காளிலேனும் ஒரு மணி நேரமேனும் சிந்திப்பதுண்டோ? இல்லை! இல்லை! அவன் தனது குழந்தைப்பருவத்தில் தனது அறிவுக்கு எட்டாத—தெய்வீகத் தன்மையெனக் கூறப்பட்ட பல செய்திகளைக் கேள்விப் படுகிறான். அவனது தூய உள்ளத்தில் இச்செய்திகள் புகுத்தப்படுகின்றன தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல், அச்சம், சாபம் முதலிய பலவும் அவனது களங்கமற்ற மனத்தைத் கவர்ந்து பாழாக்கி விடுகின்றன. அவன் மனம் சுதந்திரத்தை இழந்து விடுகிறது; தன்னிடம் புகுத்தப்பெற்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்யச் சக்தியற்றதாகின்றது. "ஆராய்ச்சி செய்யாதே; நம்பு", என்று பெரியோர் கூறிய சொல் தோன்றித் தோன்றி மனத்தை அடிமைப்படுத்தி

கற்றறிவதற்கு நம்பத் தகுந்த புது வழிகளைக் கண்டுபிடித்திருக்கவேண்டுமென்று ஜனங்கள் உணர்ந்தார்கள். விஞ்ஞானத்தின் பலனாய், இயந்திர வேலைகள் மின்சார சிற்பம், 'கார்கள்" கப்பல்கள், ஆகாய விமானங்கள், கடைகள் முதலியனவைகளில் மலிவான புதிய சுகிப்பிற்குரிய பொருள்கள் கிடைக்கின்றன. விஞ்ஞானத்தின் உதவியால் நம்முடைய வீதிகளும் டோஜனை விதிகளும் மாய் பிரமிக்கும்படியான பிரகாசமடைகின்றன. விஞ்ஞானம் எவ்வளவு உபயோகமுள்ளது என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும். உலக விஞ்ஞானத்தை அடைந்தது விஞ்ஞானமும் மதமும் எப்போதும் போராட்டத்திலேயே இருக்கும்படி சேர்ந்துவிட்டது. உலகத்திலுள்ள மதநூல் ஆசிரியர்கள் எல்லாம் விஞ்ஞானத்தைத் கோபிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்களுடைய கோபமெல்லாம் அவர்களையே பாதித்தது.

விடுகின்றது. எனவே, மனிதன் உள்ளமை எது உண்மையல்லாதது என்பதைத் தன் பகுத்தறிவால் ஆராய்ந்தறியத் துணிவின்றித் தவிக்கிறான்.

உண்மை ஒன்றே ஆன்மாவை இருள் மயமாகிய மனித வாழ்க்கை என்னும் பிரயாணத்திற் கடத்திச் செல்லும் ஒளியாகும். தன் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து உண்மை இது; எனத்துணிபவனே வீரன். அவன் கண்டறியும் உண்மையே அவனது பெரு வாழ்வைத் தூய்மையுறச் செய்வது. உண்மையே மகிழ்ச்சிக்குத் தாய்; உண்மையே மனத்தை—வாழ்க்கையை—சமூகத்தை—ஏன்—உலகத்தையே தூய்மை செய்வது; காரியம் ஆகுவது; ஒளியாவும் செய்வது.

இத்தகைய பெருமை வாய்ந்த உண்மையைக்காண மனிதனை சர்வ சுதந்தரத்துடனும் விடுதல் வேண்டும்; வேதத்தின் வார்த்தை; பூதத்தின வார்த்தை; நூல்கள் கூறுகின்றன, எனவும் பிறவாறும் விஷயங்களை மனதுட் புகுத்தி, 'இவற்றை நம்பு; எதிர் மறுத்து உரையேல்; அங்ஙனம் உரைத்தல் பாவம்;" எனக்கூறி மனிதனுக்கு அச்சத்தை உண்டாக்கி அவன் அறிவை குடத்துள் புகுத்திய விளக்கைப் போன்று ஓர் எல்லைக்குள் அடக்கி வைத்தல் எத்துணைப் பேதமை! உண்மையைக் கண்டறிய அவரவரும் ஒருவனை இங்ஙனம் தடுப்போன் மனித வர்க்கத்தின் விரோதியே ஆவான். "இதை நம்பு; உனக்கு மோட்சம் கிடைக்கும்;" என்பவன், தன் போன்ற மக்கட் கூட்டத்தையே அழிக்கும் கொடியவனாவான்.

சுதந்தரம் இன்றி உண்மையை உற்றுணர்தல் இயலாது. சுதந்திரமாவது யாது? அது வேற்றுமையின்றி யாவரிடத்தும் சிறிதும் அச்சமின்றி விஷயங்களை ஆராயத்துணிதல் என்ற இங்ஙனம் முழுச் சுதந்தரத்தோடு தனக்கு உண்மையுள்ளவனாகித் தன்னிடத்தே நம்பிக்கையுடையவனாய் ஒருவன் விஷயங்களை ஆராயின் உண்மை இன்னதென்பதை அவன் உணர்வான். இவ்வுணர்வு உள்ளவனிடத்திலே மனிதனது முதற் கடமை; மனித சமூகத்தைத் தூய்மைப்படுத்துவதுமே இது. இதுவே சுதந்திரம். இதனைச் செய்யாது பிறர் சொற்களுக்குப் பயந்து விஷயங்களை ஆராயாமல் அவற்றைப் பிற்றுவோன் அறிவிலி என்பதில் ஐயமுண்டோ?

வேத வார்த்தைகளாய் இருப்பினும், மனிதர் வார்த்தைகளாய் இருப்பினும், மனிதன் நடுநிலையினின்றும் அவற்றை ஆராய்ந்து உண்மை கண்டுகொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு, தள்ளவேண்டுவனவற்றைத் தள்ளலே முறை. துக்கம், சாபம், விருப்பு, வெறுப்பு என்பவை இன்றி விஷயங்களை ஆராய்ந்து உண்மை காண்பவனே உண்மை மனிதன். அவன் தனக்கு உண்மை எனப்படாதவற்றை உதறித்தள்ளி விடுவான்; அவை தன் முன்னோர் அபிப்பிராயம் ஆயினும் சரி, அவன் பொருட்படுத்தமாட்டான்; அவன் தன மனச்சாட்சிக்கு உகந்ததல்லாத எதையும் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். அவனே மனித வர்க்கத்திற் சிறந்தவன்.

ஓர் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுள் ஒளிந்துகொண்டான் என்று கூறப்படுகின்ற கதையை நம் பூர்வீகர்கள் நம்பி இருந்தனர். அதனை இன்று நாம் நம்புகிறோமா? இல்லை. ஏன்? நாம் பூகோள சாஸ்திரம் வாசித்திருக்கிறோம்; பூமி உருண்டை வடிவமுடையது என்பதை அறிந்திருக்கிறோம்; பூமி தட்டையாகவோ பாயாகவோ ஒரு காலத்தில் இருந்திராதென்பதை அறிவோம்; எனவே, 'இஃது ஒரு பொய்க்கதை' என்னும் எண்ணத்தைப் பெறுகிறோம். இங்ஙனம் ஒவ்வொன்றையும் நம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து உண்மையை மேடலே கற்றதனாலாய பயன் எனக.

மூளை விருத்தி செய்யப்படல் வேண்டும். பரந்த நோக்கத்தையும், விரிந்த சிந்தனையையும் வளர்த்தல் வேண்டும். பகுத்தறிவைக் கொண்டு ஒவ்வொன்றையும் ஆராய்தல் வேண்டும். எதையும் நம்பி விடுதலோ, நம்பிப் பின்பற்றுதலோ பெருந்தவறு. இங்ஙனம் பகுத்தறியும் முறையால் மனிதன் சுதந்தர நிலையை அடைகிறான். வீணான விஷயங்கட்கு அவன் அச்சப்படுதல் இல்லை, பல நோய்கள் தன்னை அணுகாதபடி அவன் காத்துக்கொள்ளக்கூடும்; தன் வாழ்க்கையை உயர்த்திக்கொண்டே போக இயலும். இதுவன்றோ உயரிய இலட்சியம்! உயரிய வாழ்க்கை! ஆனந்த நிலை!

மனிதன் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து உண்மையைக் கண்டு கடைப்பானாயின் உலகில் நிலைமை எது? பஞ்சமா பாதகம் எது? நாசகம் எது? என்றும் எங்கும் இன்பமே யன்றோ? உலகெலாம் இன்பமான பேரொலியாய் இலங்குமன்றோ? உண்

மையைக் காண்பவன் தெய்வங்கள் எனக் கூறப்படுவனவற்றுக்கும் மகாத்துமாக்களுக்கும், பிறர்க்கும், காகத்துக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. அவன் இப்பரந்த உலகத்தில் சுதந்தரவீரனாக விளங்குவான். உலகத்தின் உண்மைத் தோற்றத்தினை உணர்வான்; தானே தனக்கு நிகர் எனத் தெளிர்வான்.

பகுத்தறிவுள்ள மனிதனை வசிகரிக்கத்தக்க மதம் "உண்மையான விஷயங்கள்" என்னும் செங்கற்கள் மீது கட்டப்பட்ட கவினுறு மாளிகையாக காட்சியளித்தல் வேண்டும். அம்மதத்தை மனிதன் தானாகத் தழுவ வேண்டுமே தவிர, மதம் மனிதனைத் தழுவுவதாக இருத்தல் கூடாது.

குழந்தைகளைத் தங்கட்குத் தோன்றும் சந்தேகங்களைக் கேட்குமாறு பெற்றோரும் ஆசிரியரும் தூண்டுதல் வேண்டும். அவர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் கேட்கும் கேள்விகட்குப் பெற்றோரும் ஆசிரியரும் விடை பகர்தல் வேண்டும். ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு பள்ளிக்கூடமும் மனத்துக்கு வேலையைத் தரும் பணியாக அமைதல் வேண்டும். வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு காட்சியையும் சிறுவர் சிறுமியர் விளக்கமாகக் காணுமாறு அவற்றின் மூடத்திரைகளைப் பெற்றோரும் மற்றோரும் நீக்குதல் வேண்டும். உண்மை வாழ்க்கை இன்னதென்பதை இளைஞர்கள் உணர்த்தல் வேண்டுப; உண்மையே வடிவமாய் இலங்கும் இயற்கையைப் பரிசோதனை புரிப அவர்களை விடுத்தல் வேண்டும். இயற்கையே அறம! இயற்கையே பொருள்! இயற்கையே இன்பம், இயற்கையே வீடு! என்பதை இளைஞர் இனிதுணருமாறு செய்வித்தல் வேண்டும்.

அன்பின் தோற்றுவாயாக இலங்கும் அன்னை தன் மைந்தனுக்கு உண்மைக் கதைகளையும் உண்மைச் செய்திகளையும் எடுத்துக்கூறுவளேயாயின், அம்மைந்தன் உண்மை அறிவோடு வளருவான்; எங்கும் உண்மையை ஆராய்வான்; பள்ளி ஆசிரியர் உண்மைச் செய்திகளையும், உண்மை கதைகளையும் உணர்த்துவாயின், அச்சிறுவன் 'உண்மை' காதும், உத்தம மாணவனாக ஒளிர்வன். பின்னர் உண்மை மனிதத் தன்மையை எய்துவன், உண்மை வாழ்க்கையை பெறுவன்! உண்மைச் சோதியில் ஒளிர்வன். அந்நிலையில் உலகமே உண்மையுன் வடிவமாக அமையுமென்றோ?

ஜெக்கோஸ்லவேகியா

பூர்வீக வரலாறு

ஜெக்கோ-ஜெர்மன் தகராறு விவரமும், மியூனிச் வல்லரசுகளால் ஜெக், சின்னாபின்னப்படுத்தப்பட்ட விவரமும் தினசரி பத்திரிகைகள் படிக்கும் நேயர்களறிவர்.

இப்பொழுது ஜெக்கோ தலைவர் டாக்டர் பீனஸ் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

எனவே, ஜெக்கோ நாட்டின் பூர்வ விருத்தாந்தமும், அந்நாடு சுதந்தாமடைய அரும் தியாகங்கள் புரிந்த அஞ்சா நெஞ்சம் படைத்த மாசராக், சுதந்திர வீரர் டாக்டர் பீனஸ் இவர்களின் வரலாறும் மிக ருசிகாமாக இருக்கிறபடியால் நேயர்களுக்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றன.

ஜெக் பூர்வ வரலாறு

ஐக்தாவது நூற்றாண்டில் அதாவது 1,400 வருஷங்களுக்கு முன் செக் வகுப்பினர் தற்போது செக்கோஸ்லோவேகியா என்றழைக்கப்படும் பிரதேசத்தில் வந்து குடியேற்காலக்கிரமத்தில் தன்னாசு வற்படுத்திக் கொண்டனர். அக்தக காலத்தில் அந்தப்பிரதேசத்துக்கு பொஹீமியா நாடு என்று பெயர் வழங்கியது பொஹீமியா நாட்டில் செக் வகுப்பினரும் ஸ்லோவேகியா வகுப்பினரும் ஸ்லாவக் என்ற ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

உலகில் உள்ள ஒவ்வொருவரும் இங்ஙனம் உண்மையை உணர்ந்து பொய்யானவையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவுமாகிய செய்கைகளை மனத்தினின்று வெளியேற்றி செவ்விய நடத்தை, பேச்சு, வாழ்க்கையுடையாராய் வாழ்வாராயின் ஆ! இவ்வுலகமே இன்பமாக இலங்காதோ?

"செந்தமிழ்ச் செல்வன்"

பொஹீமியா காட்டில் செக்கோஸ்லோவேகியர் குடியேறிய சில காலத்தில் பிரமிசல் என்ற ஒரு விவசாயி மிகவும் அறிவாளியும் திறமைசாலியுமாயிருந்ததால் செக் ஜாதியினர் அவனைத் தங்களுக்கு அரசனாக தேர்ந்தெடுத்தனர். பிரிமிசல் அரசன் காலத்திலும் அவனது ராஜ குடும்பப் பரம்பரையினர் காலத்திலும் அந்நாடு எனம்பெற்று விளங்கியது.

ஒன்பதாவது நூற்றாண்டில் பொஹீமியா நாட்டு செக்கோஸ்லோவேகியர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவினர். பிரிமிசல் அரச பரம்பரையைச் சேர்ந்த I-வது வென்செஸ்லாஸ் என்ற மன்னன் அந்நாளில் பொஹீமியாவில் ஆட்சி செலுத்தினான். அவன் மிகவும் வைராக்கிய குணத்துடன் கிறிஸ்துவ மதத்தைப் பிரசாரம் செய்ய உதவியதால் பொஹீமியா நாடு அந்நாளில் ஐரோப்பாவில் பெயர்பெற்று விளங்கியது. அதனால் I-வது வென்செஸ்லாஸ் அரசனது மரணத்துக்குப் பின் அவன் சகோதரன் கதே சர்வீக்கு சகோதரனுக்கு ஏதிராக தேர்ந்தெடுக்கப் பெற்றான்; முதலாவது வென்செஸ்லாஸ் அரசனுக்குப் பின் பொஹீமியாவின் சுயேச்சைக்கு தகுமே கோட்டது. பிற்கால பொஹீமிய மன்னர்கள் ஜெர்மன் சக்கரவர்த்தியின் மேல் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி சில காலம் கழிந்தது.

பிறகு பிரிமிசல் ராஜ வம்சத்தில் தோன்றிய அட்டோகார் அரசன் செக் மன்னர்களில் மிகவும் திறமைசாலியாக விளங்கினான்; முடி சூடிய வெகு சீக்கிரமே அவன் தன் நாட்டைப் பலப்படுத்தி பகுதியிலுள்ள ஆஸ்திரியா, இஸ்டிரியா என்ற இரண்டு பிரதேசங்களை கைப்பற்றி தற்போது செக்கோஸ்லோவேக்கியா என்று வழங்கும் தனது பொஹீமியா நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். ஹங்கேரிக்கும், போலந்துக்கும் இது பொறுக்கவில்லை. உடனே அவ்விரு நாடுகளும் ஒன்று சேர்ந்து பொஹீமியா மீது படையெடுத்தன. பராக்கிரமசாலியான அட்டோகார் அரசன் பெரும் படைகளைத் திரட்டிச்சென்று அவர்களை எதிர்த்து மார்ச் நதிக்கரையில் நடந்த போரில் ஹங்கேரி-போலந்து சேனைகளை முறியடித்து ஆஸ்திரிய சாம்ராஜ்யத்தின் பெரும் பாகத்தை தன் ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்தான்; அந்த காலத்தில் செக் நாடு ஐரோப்பாவில் மிகவும் உன்னத நிலையில் இருந்ததென்னலாம். அப்போது ஜெர்மன் சக்கரவர்த்தி ஸ்தானத்துக்கு ஏனில்லாததால் அட்டோகார் அரசனை ஜெர்மன்

சக்கரவர்த்தியாகும்படி பிரபுக்களும், இரு காட்டுத் தலைவர்களும் வேண்டிக்கொண்டனர்; அட்டோகார் அரசன் அதற்கு இணங்கவில்லை; அதனால் அப்பிரமுகர்களும், பிரபுக்களும் மனத் தாங்கல் கொண்டு ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க்ராஜ பரம்பரையைச் சேர்ந்த ருடோல்வ் அரசனை ஜெர்மன் சக்கரவர்த்தியாக்கினர். வெகு சீக்கிரத்தில் ருடோல்வ் சக்கரவர்த்திக்கம், அட்டோகார் மன்னனுக்கும் மனமாச்சரியம் ஏற்பட்டு பகைமை கனிந்து 1278.ல் யுத்தம் ஏற்பட்டது. செக் மன்னரில் மிகவும் பராக்கிரமசாலியாகயிருந்த அட்டோகார் அரசன் அந்த யுத்தத்தில் மடிந்தான். அவன் பிடித்திருந்த ஆஸ்திரிய மாகாணங்களை ருடோல்வ் சக்கரவர்த்தி கைப்பற்றினான்.

அட்டோகார் அரசனுக்குப் பின் செக் நாடு முக்கிய சிறப்பு குன்றியிருந்தது. 1906-ம வருடம் பிரிமிசல் ராஜ குடும்பத்துக்கு பட்டத்துக்கு வாரசு இல்லாமல் போய் விட்டது. எனவே செக் வகுப்பினர் ஜெர்மன் சக்கரவர்த்தியின் மகனும் லக்சம்பர்க் நாட்டு மன்னனுமான ஜான் அரசனை பொஹிமியா நாட்டு அரசனாக்கினார்கள. அவனுக்குப் பின் வந்த வென்ஸெஸ்லான் அரசன் அவ்வளவு திறமைசாலி அல்ல. அவன் காலத்தில் ஜான்ஹான் மதத் தலைவர் தோன்றி செக் கலைகளையும் காகரிகத்தையும் பெரிதும் விருத்தி செய்து ஜெர்மன் காகரிக ஆதிக்கத்திலிருந்து செக் வகுப்பினரை வேறு பிரித்தான். அவன் ரோமன் கத்தோலிக் மார்க்கக் கொள்கைகளை பலமாக கண்டித்ததால், அவனை மத விரோதி என்று கழுவிலேற்றி கொலுத்திவிட்டனர். அதனால் செக் வகுப்பினருக்கு சினம் பொங்கியெழுந்தது. அவர்களை அடக்க பாப்புவின் கட்சியார் அனுப்பிய சேனைகளை யெல்லாம் முறியடித்து வெற்றி பெற்றனர். இத்தச் சண்டைகளினால் செக் காடாகிய பொஹீமியா, ஜெர்மனி, ஹங்கேரி காடுகள் பாழாயின. பிறகு பொஹீமியாவில் பல அரசர்கள் தோன்றி மறைந்தனர். அதில் பெர்னாந்து என்ற அரசன். கத்தோலிக்கமதத்தை ஆதரித்ததால் புராட்டெஸ்டானட்டர்களாகிய செக்வகுப்பினர் முனைந்தெழுந்து அவனைக் காட்டிலிருந்து துரத்திவிட்டு 16:9-ல் பிரடரிக மன்னனை தங்கள் நாட்டுக்கு அரசனாகத் தெரிந்தெடுத்துக் கொண்டாகள். ஆனால் துரத்தண்ட பெர்டினாந்து அரசன் வெளிநாட்டு கத்தோலிக்

கர் உதவி கொண்டு பெரிய சேனையுடன் பிரடரிக் அரசனை எதிர்த்தான், 1620-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் தேதி நடந்த சண்டையில் செக் காட்டினர் தோற்றனர். சுயதீனமும் ஒழிந்தது. பொஹீமியா, ஆஸ்திரிய சாம்ராஜ்பத்தில் ஒரு மாகாணமாக சேர்க்கப்பட்டது.

கிற்க 1918-ம் வரு ஜெர்மன் யுத்த முடிவில் ஆஸ்திரியா சாம்ராஜ்யம் கலைக்கப்பட்டதால் பொஹீமியாவுக்கு மீண்டும் விடுதலை கிடைத்தது.

ஆஸ்டிரிய—ஹங்கேரிய சாம்ராஜ்பம் கலைக்கப்பட்டதில் பொஹீமியா செக்கோஸ்லோவேகியா என்ற பெயருடன் சுயாதீன நாடாக வெளிப்பட்டது அப்போது செக் வகுப்பினரின் தலைவராயிருந்த டாக்டர் மாஸராக் என்பவரின் முயற்சியால் பழய பொஹீமியா நாட்டு எல்லையைச் சுற்றிய சில பிரதேசங்களும் இந்த புதிய செக்கோஸ்லோவேக்கிடர் நாட்டில் சேர்க்கப்பட்டன. அந்தப் பிரதேசங்களில் ஒன்றுதான் பெரும்பாலும் ஜெர்மனியர் வசிக்கும் ஸுடடன் பிரதேசம் என்பது. ஜெக்-ஜெர்மன் சிக்கலுக்கும் இப்பிரதேசமே காரணம். அதோடு போலந்து உரிமை பாராட்டும் டெஸ்ஷன் என்ற இடமும் ஹங்கேரி கேட்டு நிற்கும் ஒரு சிறிய பிரதேசமும் புதிதாய் ஜெக் நாட்டில் இணைக்கப்பட்ட பிரதேசத்தின் மற்ற பகுதிகளாகும். ஜெக் வகுப்பினர் உளக்கமும், சுறுசுறுப்பு முள்ளவர்கள். வேலை யில்லா திண்டாட்டம், பட்டினி ஆகிய நிலைமைகள் அங்கு வெகு அபூர்வம்.

டாக்டர் மாஸராக் வரலாறு

குடி அரசுத் தலைவராயிருந்து தமது பதவியை ராஜி நாமாச் செய்துவிட்ட டாக்டர் பீனஸின் வரலாற்றைப்பற்றி கூறுவதாயிருந்தால் மாஸராக் என்ற சிறந்த ராஜதந்திரியின் வரலாற்றைப் பற்றியும் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. ஆஸ்திரியா-ஹங்கேரியா சாம்ராஜ்யத்தைத்தகர்க்க காரண பூசாரியிருந்தவர் இவர்தான். அதன் மூலம் ஜெகோஸ்லோவேகியா மத்திய ஐரோப்பாவில் சிறந்த பலம்பொருந்திய ஜன ஆட்சி சர்க்காராக அமையச் செய்தவரும் மாஸராக்தான்.

இவர் ஒரு வண்டிக்காரரின் பிள்ளை. ஆனால் மாஸராக் தமது வயோதிகத்தில் பொஹீமிய மன்னர்கள் வாழ்ந்த

அரண்மனையில் வாழ்ந்து வந்தார். இளமையில் அதிக ஏழ்மையால் வருந்தியவர். இளம்பிராயத்தில் கொல்லன் பட்டரையில் வேலை செய்தார். சிறு வயதில் பள்ளிக்கூடத்திற்கு போவதென்றால் அவருக்கு வேப்பங்காய்தான். சென்ற மகாயுத்தத்தின் போது முதல்தரமான சதிகாரராய் விளங்கினார். ரகசிய பாஷை, உளவறியும் தந்திரம் ஆகியவைகளில் கைதேர்ந்தவர். தத்துவ ஞானியாகவும் விளங்கினார்.

ஜெக் மக்கள் சுதந்திரம் பெற வேண்டுமென்பதே இவருடைய வாழ்க்கையின் லட்சியம்.

சென்ற மகாயுத்த காலத்தில் இவர் ஆஸ்திரியாவில் அடிவைத்தால் உடனே தூக்கு மேடையில் தொங்க வேண்டியதுதான். ஆஸ்திரிய சர்க்கார் அத்தகைய கடுமையான உத்தரவைப் பிறப்பித்து விட்டார்கள். எனினும் மாஸாரக் ஆஸ்திரியாவுக்குப் போய் விடுவதென்றே முடிவு செய்துகொண்டார். தான் தூக்கில் மாண்டால், தன் உயிர்த் தியாகம் செக்கர்கள் சுதந்திரம் பெற உதவி செய்யுமென்று எண்ணினார்.

மாஸாராக்கைக் கொல்ல கடந்த முயற்சிகள் பல; ஆனால் அவற்றிலெல்லாம் சிக்கி மளாமல் தப்பித்துக்கொண்டார். எந்த கோத்திலும் தான் செத்துவிடக்கூடுமென்ற எண்ணம் மாத்திரம் அவருக்கு இருந்தது. ஆனால் தான் செத்தாலும் தன் மரணத்தை கொண்டு ஜெக் மக்களிடையே தேசாபிமானத்தை அதிகரிக்க என்னென்ன காரியங்களை செய்துவைத்துவிட்டுப் போவதென்பதில் மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

காடுகடத்தப்பட்டிருந்த தோழர் மாஸாராக், அமெரிக்காவிலேயே ஜெக்கோஸ்லோவேகியாவின் சுதந்தரப் பிரகடனத்தை வெளியிட்டார். இவர் நான்கு வருஷங்கள் தான் தாய் நாட்டில் அடி வைக்காமலிருந்தும், 4500 மைலுக்கு அப்பால் இருந்தார் என்றாலும், ஜெக்கோஸ்லோவேகியாவின் சுதந்தர சர்க்காருக்கு இவரையே தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள்.

தாமஸ் மாஸாரக் 1850 மார்ச் 7-ந்தேதி பிறந்தவர். சமயற்காரியான இவருடைய தாயார் கல்ல கெட்டிக்காரி. வீர்

மாஸாக்கின் குமாரோ இன்று லண்டனில் ஜெக் சர்க்காரின் ஸ்தானீகாரம் இருந்து வருகிறார்.

தோழர் மாஸாக் ஒருசமயம் கூறுகையில், "பீனஸ் இல்லாதிருந்தால் எங்கள் நாட்டின் சுதந்திரமே சித்தியாகியிருக்காது என்று நிச்சயமாகக் கூறுவேன்" என்றார். டாக்டர் பீனஸும் மாஸ்காக்கும் சென்ற மகாயுத்தத்தின் போது சேர்ந்து உழைத்தார்கள். பீனஸ் தனது ராஜ்ய குரு மாஸாரிக்கைவிட, 30 வருஷங்கள் வயதில் சிறியவர் ஆயினும் இருவரும் அந்தியந்த தோழர்களாகப் பழகினர்.

டாக்டர் பீனஷ் வரலாறு.

பிரேக் நகருக்கு 150 மைலுக் கப்பாலுள்ள கார்ல்ஸாணீ என்ற சிறு நகரில் ஓர் ஏழை குடியானவன் புதல்வராக 1884-ம் ஆண்டு மே மாதம் 28-ந் தேதி எட்வர்டு பீனஷ் பிறந்தார். அவர் தந்தை மாடேஜ் பென்சிற்கும், தாயாரிய அன்னமாவுக்கும் 6 ஆண்களும், 2 பெண்களும் பிறந்தார்கள். குடும்பத்தினரில் கடைசியில் பிறந்தவர் இவர். அவர் தம் தந்தை தமக்குரிய சிறு நிலத்தையே செழிப்புறச் செய்து பயிர்களை அதிகமாக வளர்க்க முயன்றார். நவீன இயந்திரங்களையும் உரங்களையும் அப்பக்கத்திலேயே அவர் தான் முதன் முதலாக உபயோகித்தார். தம்முடன் வேலை செய்ய தம் பிள்ளைகளையும் அவர் அழைத்துக்கொள்வது வழக்கம். இவர்களில் ஒருவரான பாக்லாவ் என்பார் பிற்காலத்திலே விவசாய பண்ணை நிபுணராக ஆனார்.

கல்லூரி படிப்பு

எட்வர்டு பீனஷ் சிறு பிராயத்திலேயே தம்மை ஒரு கவியாக எண்ணுவது வழக்கம்.

கலாசாலையில் படிப்பில் பீனஷ் முதன்மையாக இல்லாவிட்டாலும், அல்லும் பகலும் தமக்குப் பிரியமான நூல்களைப் படித்துக்கொண்டே இருப்பார்; அக்காலம் தொட்டே எவ்விஷயத்தையும் நுணுக்கமாக ஆராயவும், அறியவும் தலைப்பட்டார். கால்பந்து விளையாட்டிலே அவருக்கு அதிக ஆசை. ஒரு கால் கால் ஒடிந்துவிட்டது. ஆகவே அவர் தம் ஆசையை அடக்க வேண்டியவரானார். அதனால்

அவர் தமது ஓய்வு நேரத்தைப் பிரஞ்சு இலக்கியப் பயிற்சியில் செலவிடலானார். அம்மொழியிலே அதிசீக்கிரத்தில் வல்லுனர் ஆனார். கல்லூரி வகுப்பில் படிக்கும் காலத்திலேயே அவர் பிரஞ்சு இலக்கிய மொன்றை 'செக்' மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

பத்திரிகைத் தொண்டு

1904-ம் ஆண்டில் தான் பீனஷ் மாஸாரிக் பக்தரானார். அவ்வாண்டுதான் அவர் பிரேக் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தின் தத்துவ ஆராய்ச்சி வகுப்பில் சேர்ந்தார். பின்னால் பாரிஸ் சென்று படிக்க வேண்டுமென்ற அவா எழும்பியது. தந்தையும் சகோதரர்களும் மேல் படிப்புக்கான தொகை தங்களால் கொடுக்க இயலாதெனத் தெரிவித்து விட்டனர். பிரேக் நகரில் பிரசுரமான இரு பத்திரிகைகளுக்குப் பாரிஸ் நகரிலிருந்து செய்திகள் அனுப்புவதாகக் கூறி அப் பத்திரிகைகள் கொடுப்பதாகக் கூறிய சொல்ப வருவாயை நம்பிப் புறப்பட்டு விட்டார்; படிப்பிற்கும், பத்திரிகைகளுக்கு எழுதுவதற்கும் அடிக்கடி சிரமம் ஏற்பட்டது. எனினும் தமது நேரத்தைப் பிற விஷயங்களில் சிறிதும் செலுத்தாமல் முயலுவாராயினர். பத்திரிகைகளிலிருந்து வரக் கூடிய வருவாய் அதிகரிக்க என்ன செய்வதென்று எண்ணினார்; சரியான முறையிலே ருசிகரமாக செய்திகளை எழுதி அனுப்பிவரத் தலைப்பட்டார். அதனால் அவர் தம் கட்டுரைகளுக்கு செக் காட்டிலே மிகவும் மதிப்பு ஏற்பட்டது, அவர் சில பிரஞ்சு பத்திரிகைகளுக்குத் தமது தாயக ராஜ்யமாகிய ஆஸ்திரியா-ஹங்கேரியைக் குறித்துக் கட்டுரைகள் வரையலானார். இங்ஙனமாக அவர் தம் வருவாயைப் பெருக்கியதுடன் ராஜியல் துறையிலே ஒரு பெரும் அறிவாளி எனவும் பெயர் வாங்க முயலுவாராயினர். சிறிது காலம் கழித்து லண்டனுக்கும், பெர்லின் நகருக்கும் சென்று ஆங்காங்கு சில காட்கள் கழித்து 1908-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திரும்பவும் பிரேக் நகருக்கு வந்தார்.

ராஜியல் கட்டுரைகள் வரைந்தபோதெல்லாம் கட்சி பேதங்களுக்கு இடங்கொடாமலேயே விஷயங்களை எடுத்துச் செல்லும் வகையில் அவர் வெளியிட்டார். இறுதியாக அவர் பிரேக் நகரின் பல்கலைக் கழக பொருளாதார பேராசிரியராக அமர்ந்தார்.

செர்பியா மீது ஆஸ்திரியா படையெடுத்த சமயம் பீனஷ் தமது கிராமத்திலிருந்தார். இங்கிலாந்து ஆஸ்திரியாவிற்கு விரோதமாக இறங்கியதைக்கேட்டதும் ஆஸ்திரியா-ஹங்கேரி அழிவது நிண்ணமென்பதைக் கண்டார். எனவே இதுவே தம் நாடு சுதந்திரம் பெறத்தக்க சமயமென்று தீர்மானித்து தமது கருத்தை தமது மனைவியிடமும் சில நண்பர்களிடத்தும் தெரிவித்தார். பிறகு கேரே பிரேக் நகருக்குச் சென்று மக்களின் மன நிலையை கவனிக்கலானார். அந்நாட்டின் அரசியல் தலைவர் பலர் ஆதரவளிப்பதாகக் கூறவே பீனஷ் ஆவன செய்ய தலைப்பட்டார்.

1914-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி "காஸ்" என்ற பத்திரிகையின் காரியாலயத்தில் சேர்ந்து போராசிரியர் மாஸராக்குடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளலானார். மாஸராக், பீனஸ், இன்னும் வேறு பலரும் பொசக் என்றவர் இல்லத்திலே கூடி, செக் நாட்டின் சுதந்திரம் பெற ஓர் இரகசிய சங்கத்தைத் துவக்கினர். 1915-ம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்கு பிறகே இக்கழகம் உறுப்படியாக வேலை செய்ய ஆரம்பித்தது. இக்கூட்டத்திலே கிராமர், ரேசின், ஷினர் என்ற பலரும் சேர்ந்து உழைத்தனர். அந்நான் தொட்டே மாஸராக்குக்கும் பீனஷுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது. இக்காலத்திலே பல இரகசிய வேலைகளை மாஸராக்குக்காகப் பீனஷ் செய்தனர்.

ஜெக்உள்நாட்டு மந்திரியின் வேலைக்காரன் கொளண்டா னன்பவன் மூலமாக அரசாங்கம் மாஸராக்கைக்கைது செய்யப் போவதாகப் பீனஷ் அறிந்தார். 1914ம் ஆண்டு டிசம்பரில் மாஸராக் ஸ்விட்ஜர்லந்திலுள்ள ஜூரிச் என்ற நகருக்குச் சென்று விடுமாறு ஏற்பாடு செய்தார். அடுத்த மாதம் பீனஷ் அந்நகருக்குச் சென்று மேலே செய்ய வேண்டிய காரியங்களைக் கேட்டுக்கொண்டு வேண்டியனசெய்தார், அக்காலத்திலே உண்டிக்கும் உடைக்கும் அவ்வீரர்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். அடிக்கடி நாட்டிலுள்ளே சுற்றுவதற்கும் தந்தி தபாலுக்குங்கூட மிகவும் கஷ்டப்பட்டதாகப் பீனஷ் ஓரிடத்திலே கூறியுள்ளார்.

அவர்களுடைய இரகசிய சதியாலோசனை எங்ஙனமோ போலீசிற்கு எட்டியது. அதனைப் பீனஷ் அறியவே சந்தேகத்துக் கிடமளிக்கத் தக்க கடிதங்களையெல்லாம் அழித்து

விட்டனர். அதற்குள் ஹாமர், ரேசின், ஷினர் முதலியோர் கைது செய்யப்பட்டனர்.

பட்ட கஷ்டம்.

இந்நிலைமையில் மாஸராக் ஸ்விட்ஸர்லாந்தில் இல்லாமல் முதலில் பாரிசுக்கும், பின் லண்டனுக்கும் சென்றார். போலீசார் இவர் தம் கூட்டத்தை பிரோக்ஹரில் கண்டுபிடிக்க முயன்றனர். இதை யறியவே பீனஷ் தம்மிடமிருந்த டாலி அணுமதி சீட்டொன்றில் தமது பெயரை குறித்துக்கொண்டு சுவிட்ஜர்லாந்துக்கு பறந்தார். போகும் வழியில் ஜெர்மன் இராணுவ அதிகாரிகள் அவரை சந்தேகப்பட்டு பல விசாரணையின் பேரில் அணுமதித்தார்கள். ஜினிவா சென்றதும் தமது மனைவிக்குதாம் அங்ஙனம் சேர்ந்ததை குறித்து இராகிய பாஷையில் தந்தி கொடுத்து தேற்றினார்.

1915-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ந் தேதி மாஸராக் உத்திரவின்படி பாரிசிலுள்ள ஜெக் மக்களின் ஆதரவுடன் தமது வேலையை எட்வர்ட் பீனஷ் துவக்கினார்; பிறகு சிறுபத்திரிகையின்பேரில் ஒரு சிறு இடத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதைச் செக் சுதந்திர இயக்கக் காரியாலயமாகச் செய்தார்.

எவ்விதமே பீனஷ் பாரிஸில் படித்தவரானதால் அங்குள்ள பல பேராசிரியர்களை அறிவார்; மாஸராக்குக்குத் தெரிந்த பலரும் அவருக்கு உதவ முன்வந்தனர்; எவ்விதமே சில பாரிஸ் பத்திரிகைகளுடன் தொடர்பு இருந்தபடியால் பத்திரிகாசிரியர்களின் உதவியும், பிறகு அதிகாரிகளின் கட்டுப்பாடு கிடைத்தது; பிரஞ்சுகாட்டில் ஆதரவு தேடிக்கொண்டே தமது நிலைமையை வலுப்படுத்த முஷ்யா, ஹுமெரிக்கர், லண்டன், பாரிஸ் முதலிய இடங்களிலுள்ள செக்ஸ்லாதி யினரை நாடிப் பிடித்து அவர்களைத் தம்மையே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார். தமக்கு செக்காட்டினரின் பூரண ஆதரவிருந்தாலேயே செக தேசங்கள் உதவ ஒருப்படுமென்ற கருத்துடனேயே தம் இனத்தவரின் ஆதரவைப் பெரிதும் பெருக்கி வந்தார்.

செக்கோஸ்லோவேகியா வெளிநாட்டுக்கழகம் என்ற தன் சார்பில் செக்கோஸ்லோவேகியாவிற்குப் பூர்ண சுயராஜ்யம்

வழங்கப்பட வேண்டுமென ஒரு பிரகடனம் பாரிஸிலுள்ள செக் சாதியினரைக்கொண்டு வெளியிடச் செய்தார். ள்திபா னிக் என்ற போர்வீரன் தலைமையில் செக் தேசீயக் கழகம் பாரிஸில் தோன்றியது. அதற்குக் காரியதரிசியாக பீனஷ் 1916-ஆண்டு பிப்ரவரியில் தேர்ந்தெடுக்கப்பட்டார்; இறுதி யாக எல்லா செக் கழகங்களும் இச்சங்கத்தைத் தங்கள் அர சாங்க சபையாக ஏற்றுக்கொண்டன; இச் சங்கத்தின் கிளை கள் ரோமாபுரியிலும், லண்டனிலும், சுவிட்ஜர்லந்திலும் தோன்றின; மாஸாரிக் அச் சபையில் சப்பந்தப்பட்டிருந்ததை அறியவே எல்லா செக், ஸ்லோவேகிய ஜாதியார்கள் அதற்கு தங்கள் தங்கள் ஆதரவை அளித்தார்கள்.

அது முதற்கொண்டு அச்சபை கோடியாக உலக அர சியல் சதுரங்கத்தில் இறங்கத் துவங்கியது; அந்தக்காலத்திலே யும் பீனஷுக்கு டொருட்குறைவு; எனவே தமது சமையல் வேலை முதற்கொண்டு எல்லா வேலைகளையும் தாமே செய்து கொண்டார்; ஓய்வு என்பதே இல்லாமல் அல்லும் பகலும் காட்டின் சுதந்திரத்திற்கான வேலையில் ஈடுபட்டார்; பத்திரி கைகளுக்கு எழுதி பிரசாரம் செய்வதை நிறுத்திவிட்டார். பாரிஸிலுள்ள நிருபர்கள் யாரும் அவரிடமிருந்து விஷயம அறிய அவர்களே அவரைப்பார்க்க அடிக்கடி வந்து கொண்டிருந்தனர்; அக்காலத்தில் மேலே ஆகவேண்டிய காரி யங்களைக் குறித்து அடிக்கடி மாஸாரிக்கைப் பார்க்க அவர் லண்டன் செல்வதுண்டு. ஒரு செகோஸ்லோவர் படைதிரட் டப் பாரிஸில் ஏற்பாடு செய்தார். கடைசியாகப் பிரெஞ்சு அதிகாரிகளின் உதவியின் பேரில் 1917-ம் ஆண்டு டிசம்பர் 16-ந் தேதி தம் கழகத்தின் சார்பில் ஒரு பெரும செகோஸ்லேவர் படைதிரட்டினார். அக்காலத் தில்தான ஆஸ்திரியாவின் அரசர் பிரான்சிஸ் ஜோசப் இறந்து சார்லஸ் செங்கோல் பூண்டது. ஆஸ்திரியாவின் படையிலி ருந்து பல செகோஸ்லேவர்கள் இப்புதிய படையை காடிச் சேர்ந்தனர். அக்காலத்திலேயே தார்தியூ எனபவர் மூல மாக, காலஞ்சென்ற பிரஞ்சு டங்கிரி பிரையாண்டின் கட்டைப் பெற்றார். பல பெயர் பெற்ற பத்திரிகைகள அவர் தம் வேண்டுகோளின் மேல் செகோஸ்லேவேகியாவிற்குச் சுதந் திரம் வழங்கப்படவேண்டுமெனத் தலையங்கங்கள் எழுதத் தலைப்பட்டன.

அதனை அறிந்த ஆஸ்திரிய அரசாங்கத்தினர் செக் தலைவர்களைக் கொண்டு பீனஷ் காரியத்திற்கு இடையூறு

விளைவிக்க முயன்றனர், ஆனால் அம்முயற்சி பெரிதும் பயனளிக்கவில்லை பீனஷ் செக் தலைவர்களை ஆஸ்திரியாவின் தந்திரங்களில் சிக்கிக்கொள்ளாதிருக்கும்படி வேண்டிக் கொண்டார். ருஷ்யப் புரட்சி ஏற்பட்டதும் அங்குள்ள செக் வீரர்கள் தாய்நாடு திரும்பி பாரிஸ்படையில் சேர விரும்பினர். அதற்காக மாஸரார்க் ருஷ்யா சென்றார். அங்கு ஒரு மாதிரியாக ஏற்பாடுகள் செய்து விட்டு அமெரிக்காவில் ஆதரவு தேடச் சென்றார். 1918-ம் ஆண்டு ஏப்ரல் 20-க்தேதி பிரெஞ்சு முதல் மந்திரி கிளிமென்சி அவருக்கு பூரண ஆதரவு அளிப்பதாகக் கூறினார். ருஷ்யாவிலுள்ள ஜெக் வீரர்களை கொண்டு வரும் வேலையை பிரஞ்சு அரசாங்கம் ஆங்கில அரசாங்கத்திற்கு கொடுத்தது. அதனால் செக் விஷயத்தில் இங்கிலாந்திற்கும் சம்பந்தம் ஏற்பட்டது. எனவே அதன் ஆதரவையும் பெற 1918 ம் ஆண்டு மே 17க் தேதி லண்டனுக்குப் பீனஷ் புறப்பட்டார். வைகாம் ஸ்டீடு, டர்பி பிரபு முதலியோரின் உதவியால் வெளிநாட்டு இலாகா காரியதரிசி முதலியோரின் கட்புக் கிடைத்தது. 1918ம் ஆண்டு ஜூன் 3 க்தேதி யன்று ஆங்கில அரசாங்கம் பீனஷின் கழகத்தை அங்கீகரித்து செகோஸ்லோவேகியா சுதந்திரம் பெற ஒத்துக்கொண்டது. பாரிஸில் திரட்டப்பட்ட செக் படையை செகோஸ்லோவேகியாவின் தேசிய படையாக ஏற்றுக்கொண்டது. அதே மாதம் 28ம் தேதி பிரஞ்சு அரசாங்கம் செகோஸ்லேவேகியா பூரண சுதந்தரம் பெறவும், அதற்கு முன் காலத்திலிருந்த பிரதேசங்களுடன் சுதந்திர நாடாக நிலவ முழு ஆதரவும் அறிவித்தது. அன்றே பீனஷ் மகிழ்ச்சியில் ஆழ்ந்தார், மறுநாள் செக் படை அணி வகுப்புக்காட்சி நடந்தது. அப்போது அப்படைக்கு செக்நாட்டின் கொடி தரப்பட்டது. அதற்குப் பிரஞ்சு நாட்டின் தலைவர்கள் அனைவரும் விழாயம் செய்தருந்தனர் உடனே அவர் இங்கிலாந்து சென்று வைகாம் ஸ்டீடின் உதவியால் பிரஞ்சு அரசாங்கம கொடுத்த மாதிரி ஓர் உறுதிமொழியை அந்நாட்டின் அரசாங்கத்தினின்றும் பெற்றார். உடனே ஜப்பானும் அதே முறையில் ஓர் அறிக்கை வெளியிட்டது. அமெரிக்காவும் மாஸாரக் முயற்சியில் செக் பூரண சுதந்திரத்திற்கு உடன்பட்டது.

1918ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25க்தேதி பிரேக் நகரில் செக் நாடு சுதந்திரம் பிரகடனப் படுத்தப்பட்டது. மாஸாரக் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டிசம்பர் மாதம் பதவியேற்றார் 1919ம் ஆண்டு செப்டம்பர் மாதம்

அடுத்த உலகயுத்தம்

சென்றமாத இறுதியில் ஏற்பட்ட ஐரோப்பிய நெருக்கடிக்கு முன்னால் "இண்டிபென்டெண்ட் இந்தியா"வில் தோழர் எல்லன் ராய் (Ellen Roy) அவர்கள் எழுதியது.

ஒரு புதிய உலகயுத்தம் எவ்வளவு சீக்கிரம் ஏற்படலாம்? எந்த எந்த காடுகள் இதில் ஈடுபடும்? சமீபகாலங்களில் ஐரோப்பாவில் நடந்த சம்பவங்களுக்குப் பிறகு (அதாவது ஆஸ்திரியாவை ஜெர்மனி ஆக்ரமித்துக்கொண்டபிறகு—மொ.ர்) மேல் சொன்ன இரண்டு கேள்விகளும் அடிக்கடி கேட்கப் படுகிறது. உலகப்போக்கானது சண்டையை எதிர்பார்த்துச் செல்லுகின்றது. இதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் அல்லது இரண்டுவித நோக்கங்கள் இழுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று சண்டையை எதிர்நோக்கிச்செல்வது, அதாவது தனிமானஆயுதப்பெருக்கு; மற்றொன்று சண்டையைத் தடுத்தல், அதாவது சீக்கிரத்தில் சண்டை உண்டாகாமலாவது காலங் கடத்தி வருவது. இந்த இரண்டுகொள்கைகளும் மோதிக் கொள்வதற்கு காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. உலகப் போக்கானது மேல்சொன்ன ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாறிக் கொண்டிருக்கிறது. இரண்டில் எதாவதொன்றால் சண்டை எற்பட்டே தீரும். ஆஸ்திரிய நெருக்கடியானது ஒரு உலக யுத்தம் வருவதற்கு காரணமாய் இருந்தது (அதேபோல் சூடானின் நெருக்கடியும் ஒரு உலகயுத்தத்திற்கு காரணமாய் இருந்தது-மொ. ர்) சென்றஉலகயுத்தமானதுஒருசாதாரணசம்பவத்தால் எதிர்பாராமல் ஏற்பட்டது. ஆனால் ஆஸ்திரிய சம்பவத்தைப்போல் அவ்வளவு முக்கியத்துவம் பொருட்டதல்ல. ஜப்பான் மஞ்சூரியாவை விழுங்கியதும் ஒரு சண்டைக்குக் காரணம்தான். இன்னும் இதைவிட அபிசீனியாவை ஆக்ர

44ம் தேதி தான எட்வர்டு பினஷ் பிரசாத் திரும்பினார். மாஷரால் இறந்தபின் டாக்டர் பினஷ் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

யித்ததும், ஜர்மனியும் இத்தாலியும் ஸ்பெயின் உள்நாட்டுச் சண்டையில் தலையிட்டதும் முக்கிய காரணங்கள் தான். ஆனால் மேலே சொன்ன எந்த சம்பவமும் சண்டையை உண்டாக்கவில்லை. ஆஸ்திரிய சம்பவம் சண்டைக்கு முக்கிய காரணமாய் கருதப்பட்டது. ஏன்? ஆஸ்திரிய சுதந்திரமானது வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை மூலம் உறுதியாக்கப்பட்டிருந்தது. அதற்கு விரோதமாய் எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் பிரான்சாலும் ஆங்கிலேயராலும் தடுக்கப்பட்டு வந்தது. வெய்மர் பிரஜா பிரபுத்வ சர்க்காரும் ஆஸ்திரியாவுக்கும் ஏற்படாத உத்தேசித்திருந்த சங்க கூட்டுறவை கட்டுப்பாடான எதிர்ப்பையும் மீறி கலைக்கப்பட்டது. இந்த சமயத்தில் ஜெர்மனியர் சதாரணமாய் ஆஸ்திரியாவில் பிரவேசித்து ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை கைப்பற்றியது. கேற்று வரை சுயேச்சையாய் இருந்த ஆஸ்திரியாவை ஜெர்மனியின் ஓரு மாகாணமாக ஹிட்லர் உரை சாற்றினார். இவ் வளவுக்கும் ஓரு காலத்தில் ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுகிறவர்களாய் இருந்தவர்கள் ஒன்றும் செய்ய வில்லை. இதிலிருந்து சண்டை என்றால் அதிகம் பயப்படுகிறார்கள் எனபது புலனாகிறது. ஒருவரும் சண்டையை ஆரம்பிக்க தைரியமில்லாதிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த பயம் எவ்வளவு காட்காலந்து நீடிக்கும் என்றும் இதன் காரணமாய் சண்டை எப்பொழுது ஏற்படும் என்பதையும் சொல்வது மிகவும் கஷ்டமான காரியந்தான்.

இன்று உலகில் பேசப்படுவதிலிருந்து சண்டை அவசியம் வந்தே தீரும். ஏன்? இத்தகையான ஆயுதப் பெருக்கத்திலிருந்து எவ்வளவு தான் ஓவ்வொருவரும் சமாதானத்தை விரும்புவதாச் சொன்னாலும், இப்பொழுதோ அல்லது இன்னும் சில காட்கள் கழித்தோ உலக யுத்தம் உண்டாவது நிச்சயம். ஏனென்றால் பக்கத்து வல்லரசுகளின் பலம் பொருந்திய யுத்த சாதனங்களினால் பயந்தாலும் அதே சமயத்தில் அளவற்ற மான போர் சாதனங்களை பெருக்கிக் கொள்வதில் அதி தீவிரமாய் போட்டி நடந்து வருகிறது. ஓவ்வொரு வல்லரசும் தங்கள் நாட்டின் பொருளில் அதிகப் படியான பாகத்தை போர் கருவிகளை உற்பத்தி செய்வதில் செலவிடுகின்றன. சமாதானத்தைக் காப்பாற்ற என்று சொல்லிக்கொண்டு சண்டைக்குத் தயாராகுகிறார்கள். அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பொருளாதாரத்தில போக்கானது அவர்களை அந்த வழியில் கட்டாயப்படுத்து.

கிறது. எனென்றால் போர்க் கருவிகளில் போடும் மூலதனம் எந்த லாபம் தரும் சாமானையும் உற்பத்தி செய்யாது. ஏன்? துப்பாக்கியும் பீரங்கியும் மற்ற எந்திரங்களைப் போல் எந்த சாமானையும் உற்பத்தி செய்ய பயன்படாது. மாறாக அவைகள் எவ்வளவு நாட்களுக்கு உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றதோ அவ்வளவு நாட்களின், மூலதனத்தின் வட்டி கஷ்டமாகிறது. அத்துடன் அவைகள் பழுதையை அடைந்துவிடுகின்றன. ஒவ்வொரு நாளும் சகோதர நாடுகளில் மிகவும் முற்போக்கான ஆயுதங்களையும், மற்ற போர் சாதனங்களையும் கண்டு பிடிப்பதின் மூலம் மற்றவர்களை குறைந்த பலமுள்ளவர்களாக ஆக்கும் முயற்சியில் வேகமாய் முன்னேறுகிறார்கள். ஆகவே அப்படிதை தயார்செய்யும் போர் சாதனக் கருவிகள் எப்படியும் சண்டையைத் தான் உண்டாக்கும். விபரமாய் சொல்லவேண்டுமானால் சண்டை வந்தால் தான் மேற் போர் கருவிகள் லாபகரமாய் விற்கப்படும்.

காரணம் போர்க்கருவிகளை உண்டாக்குபவர்கள் எல்லாம் ரஷ்யா தவிர்த்த மற்ற நாடுகளில் தனிப்பட்ட முதலாளிகள் தான். அப்படிப்பட்ட முதலாளிகள் கையில் தான் இன்று எல்லா நாடுகளும் சிக்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே சண்டையை உண்டாக்கினால் தான் அவர்கள் தயார் செய்து வைத்துள்ள போர்க் கருவிகளை லாபகரமாய் விற்க முடியும். அரசாங்கம் தங்கள் கையில் இருக்கும் இந்தச் சமயத்தை அவர்கள் தாங்கள் லாபம் சம்பாதிக்கப் பயன் படுத்திக்கொள்வார்கள். இது அவர்களின் பிறவிக்குணம். ஆகவே சண்டை வருவது நிச்சயம்.

கடைசியாக சற்று ஊன்று கவனித்தால் உலக நிலையானது ஐரோப்பிய சமூகத்தை இரண்டு பெரும் பிளவுகளாகச் செய்வதில்வெகுவேகமாய்சென்று கொண்டிருக்கிறது. இதுவே கடைசியில் ஒன்றை ஒன்று தாக்குகின்ற நிலைமையில் கொண்டு வந்து விடும். ஒரு பக்கம் இத்தாலியும் ஜெர்மனியும் தங்கள் கூட்டாளியாகிய ஜப்பானும், மற்றொரு பக்கம் பிரான்ஸ் இங்கிலாந்து சில சிறிய நாடுகள். இந்த இரண்டு கூட்டங்களின் விரோதத்தை அடிப்படையாகக் கொண்டு சண்டை உண்டாகாது. காரணம் என்ன வென்றால் சென்ற மகாயுத்தத்தின் முடிவு புரட்சியில் முடிந்தது. அதாவது முதலில் ரஷ்யாவிலும் பிறகு ஜெர்மனியிலும் பின் சில சிறிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. அந்த போல் தற்சமயம் சண்டை ஏற்

பட்டால் முன்னையை விட அதிகமான காடுகளில் புரட்சி ஏற்படலாம். அப்படி ஏற்படும் புரட்சி தோல்வி அடைந்த காடுகளுடன் மட்டும் நில்லாது வெற்றி யடையும் காடுகளி லும் ஏற்படலாம். இதன் காரணமாகத்தான் வல்லரசுகள் சண்டையில் இறங்கப் பயப்படுகின்றன.

அதேகருக்கு இங்கிலாந்தும் பிரான்ஸும் எப்படி ஜெர் மனி காடுகளால் செய்யப்படும் அமைதிப்பையும் இழுச்சி களையும் தாங்கிக்கொண்டு வருகின்றன என்பதைச் சொல்ல முடியவில்லை இது சம்பந்தமாய் நமது காட்டில் ஒரு எண் ணம் நிலவி வந்துளளது. அதாவது இத்தாலியும் ஜெர்மனி யும் அதிக பலம்பெற்றுவிட்ட படியால் இங்கிலாந்தும் பிரான் சும் சண்டை செய்யப் பயப்படுகின்றன என்பதாகும். இந்த எண்ணம் வேண்டுமென்றே தவறாக எழுப்பப்பட்டுள்ளது. இத்தாலியும் ஜெர்மனியும் அதிக சைன்யங்களைக் கொண்டு ளது ஒரு அளவுக்கு உண்மையாயினும் இங்கிலாந்தையும் பிரான்சையும் சேர்ந்தாற் போல் எதிர்க்க முடியாது. இன் னும் இங்கிலாந்தும் பிரான்சும் ஜாடமாடையாய் இருந்தி ருக்காவிட்டால் இத்தாலியும் ஜெர்மனியும் அவ்வளவு பலம் பெற்றிருக்க முடியாது.

அதாவது ஹிட்லர் ரெயிச்சின் அக்ராசனராக வந்து முக்கியமான சமாதான உடன்படிக்கைகளை கிழிக்க ஆரம் பித்தபொழுது, பிரான்ஸால்கண்டிக்கப்பட்டிருந்தால் ஜெர்மனி அடங்கிப்போய் இருக்கும். ஆனால் ஹிட்லர் தான் அதுசம யம் விரும்பியது தன் தேசத்தைக் காப்பாற்ற தனக்கு எதி ராய் உள்ள உலக பலத்தைத் தண்டிக்க ஆசைப்பட்டான். மேல் சொன்னபடி பிரான்ஸ் தலையிட்டிருந்தால் ஹிட்லர் தனது முயற்சியில் முறியடிக்கப்பட்டு உள் நாட்டில் புரட்சி தோன்றி இருக்கும். அதன் பயனாய் ஹிட்லர் அப்பொழுதே மறைந்திருக்க நேரும். ஆனால் ஜெர்மன் ராணுவ பலம் மிக வேகமாய் வளருவதை பிரான்ஸும் இங்கிலாந்தும் விரும்பா விட்டாலும் புரட்சி தோன்றுவதைவிட ஜெர்மன் ராணுவப் பெருக்கு குறைந்த ஆபத்து உடையது என்று கருதினார்கள். இன்னும் நிதர்சனத்தைச் சொல்லவேண்டுமானால் புரட்சியைத் தடுக்கவே ஜெர்மன் ராணுவ பலத்தை அதிகப்படுத்தவும், வெளியில் ஜெர்மன் ஆதிக்கம் அதிகப்படவும் ஹிட்லருக்கு இடம் கொடுக்கிறார்கள்.

''நீ எல்லாவற்றையும் கொடுத்துவிட வேண்டும் என்று பயமுறுத்தப்படும் பொழுத பாதிலை தானாகவே கொடுத்து விடு'' என்ற கொள்கைப்படி இங்கிலாந்தும் பிரான்ஸும் கடந்து வருகின்றன. அபிசீனியாவை இத்தாலி கைப்பற்றியது மேலே சொன்ன கொள்கைப்படிதான். ஆயுஸ் கால்வாயை இங்கிலாந்து அடைத்திருக்குமானால் முசோலினி அபிசினியாவில் தோல்வி அடைந்திருப்பார். முசோலினியின் தோல்வி என்றால் முசோலியின் சர்வாதிகாரம் ஒழிந்து இத்தாலியில் புரட்சி ஏற்பட்டிருக்கும். இந்த புரட்சிக்குப் பயந்து தான் இங்கிலாந்து தான் விரும்பாத ஒன்றை அதாவது அபிசீனியாவைக் கைப்பற்ற இத்தாலியை அனுமதித்தது. ஆக அபிசீனிய சம்பவம் இங்கிலாந்திடத்திருந்து வந்தது என்பதில் வெளிப்படை. அதோடு மற்றொரு சமாச்சாரத்தை ஆலோசிப்போம். அதாவது அடுத்த யுத்தம் வருவது தாஸ்வை பலத்தால் மட்டும் அல்ல. ஏனென்றால் இதில் முக்கியமானது பொருளாதார நிலை. ஜெர்மனி இத்தாலி இந்நாடுகளுடைய பொருளாதார நிலை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. அவைகள் இனிமேல் சண்டை நடத்துவென்பது முடியாதது. ஒரு சமயம் சில மாத காலங்கள் மட்டும் நடத்த முடியும். இதற்கு மாறாக பிரான்ஸ், இங்கிலாந்து போன்றநாடுகளுடைய பொருளாதார நிலை பெருகிவரும்.

இத்தாலியும், ஜெர்மனியும், மற்ற எல்லாநாடுகளும் தங்களுக்குவிரோதமாய் இருந்தும், தாங்கள் விரும்பியதை அடைந்து வருகின்றன. இதை விடுகதை போன்றதென்று சொல்லலாம். ஆனால் இது முற்றிலும் உண்மையல்ல. ஏனென்றால் இங்கிலாந்தும் பிரான்ஸும் தங்களுடைய எல்லா செய்கைகளையும் தாங்களாகவே விட்டுகொடுத்து வந்தன. ஏனென்றால் சண்டை நடவாமல் இருக்கவேண்டுமென்பதற்காகவல்ல. ஆனால் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் உள்ள எதேச்சாதிகார ஆட்சியை முறியடிக்க விரும்பாததால்தான் அப்படி எதேச்சாதிகாரம் முறியடிக்கப்பட்டால் அதுவே முதலாளித்துவ வகாதிபத்தியத்தின் வீழ்ச்சி-அதாவது ஐரோப்பா முழுதும் வகாதிபத்தியம் சீர் குலையும் என்பதை உணர்ந்தே யாகும்.

ஆனால் ஐரோப்பியக்கூட்டத்தில் மற்றொரு முக்கிய அங்கம் இருந்துவருகிறது. அதைத்தான் எல்லா ஐரோப்பிய வல்லரசுகளும் முக்கிய ஆபத்தாக கிணைத்திருக்கின்றன.

அதுதான் உழைப்பாளிகளால் ஆளப்பட்டும் சோவியத் நாடு. ஒரு வேளை மேற்படி சோவியத்நாட்டிற்கும் மற்றஎல்லா நாடுகளுக்கும் சண்டை ஒரே சமயத்தில் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் ஜெர்மனியின்நோக்கம் கீழ்நாடுகளில் விழுந்திருப்பது வெளிப்படை. ஆஸ்திரியாவைச் சேர்த்துக்கொண்டது (தற்சமயம் சூடடனையும் சேர்த்துக்கொண்டது—மொ. ர்) அதற்கு முதற்படி செக்கோஸ்லவோகியாவை அடுத்தபடியாகைப்பற்ற முடிவு செய்துள்ளது. (முக்கால் பங்கு கைப்பற்றியாகிவிட்டது மொ. ர்) ஹிட்லர் ஓரேயடியில் செக்கோஸ்லவோகியாவையும் ஆஸ்திரியாவையும் விழுங்கநினைத்திருந்தார். ஆனால் கடைசி நிமிடத்தில் மேல்நாட்டு வல்லரசுகளின் மரியாதையை பாதுக்கும் என்பதை உணர்ந்தான். ஏனென்றால் அவர்கள் வெளிநாடு ஜனநாயகக் கொள்கையுடையவை என்று காட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கே. அதோடு செக்கோஸ்லவேகிய சர்க்கார் ஜெர்மன் மைனாரட்டி கட்சியாருடன் சில நிபந்தனைகள் செய்துகொண்டார்கள். ஆக ஆஸ்திரியாவைச் செய்ததுபோல் செய்யமுடியாமல் பின்னுக்கிழுத்தது. ஆனால் அத்திட்டம்எப்பொழுதும் நிறைவேற்றப்படலாம். (நிறைவேற்றப்பட்டாகி விட்டது. மொ. ர்) இதனால் ஜெர்மனியானது மிகவும் ஆபத்தான சோவியத்நாட்டின் எல்லையை நெருங்கலாம்.

சோவியத் நாடு தற்சமயம் எந்த சண்டையையும் விரும்பவில்லை. ஏனென்றால் சண்டைவந்தால் மற்ற உலக வல்லரசுகள் எல்லாவற்றையும் இரண்டு எல்லையில் போரிட வேண்டும் என்பதை அது உணர்ந்துள்ளது. அதனால் தான் ஷை சோவியத்நாடு இதுவரை எந்தபோராட்டமும்ஏற்படாமல் பார்த்து வந்துள்ளது. லித்துவேணியாவானதுதனது சுதந்திரத்தையும் உரிமைகளையும்போலண்டின் திட்டத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டி வந்தபொழுது சோவியத்நாட்டின்பெருமை, மானம், மனச்சாடசி முதலியவைகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படும் முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. லித்துவேணியாவும், மற்றநாடுகளும் எதிர்பார்த்தபடி சோவியத்நாடு கடந்திருந்தால் இந்நாட்களில் சண்டை ஆரம்பித்திருக்கும். ஆனால் சோவியத்தோடு வெகு கஷ்டப்பட்டு ஷை நிலைமையை சராளித்துக்கொண்டது இந்நிலையிலும் வெகு நாட்களுக்கு இருக்க முடியாது. சண்டை ஆரம்பிப்பதை எவ்வளவு நாட்களுக்கு ஒத்திபோட்டுக்கொண்டேபோகப்படுமென்பதை சொல்வதும் மிகவும் கஷ்டந்தான். உத்தேசமாய் இன்னும் 2, 3 வருடங்கள் கடத்தலாம். அந்த சமயத்தில் மேல் நாட்டு

வல்லரசுகள் எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு தங்கள் போது விரோதிபாகிய சோவியத் காட்டை எதிர்க்க முயற் சிக்கலாம். ஆனால் பிரான்ஸ் மட்டும் இதுவரை தனது பழய கொள்கைகளை விட்டதாகத் தெரியவில்லை ஆனால் புரட்சி மனப்பான்மையில் பெருகும் பலம் தானாக சண்டையில் ஈடு படுவதற்கு பதிலாக எதிர் பாரா திடீர் சம்பவங்களால் சண் டையில் இறங்கும்படி கட்டாயப்படுத்தப்படலாம்.

இங்கிலாந்தும் ஜர்மனியும் ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்று நினைப்பதற்கு வழியிருக்கிறது. எனென்றால் இங்கிலாந் தின் அன்னிய நாட்டு மந்திரி லார்டு ஹலிபாக்ஸ் ஹிட்லரை "நீ ஆஸ்திரியாவை எடுத்துக்கொண்டு மத்திய ஐரோப்பாவை சரிப்படுத்துவதுடன் எங்கள் குடியேற்ற நாடுகளுடன் எங் களைவிட்டு விடு" என்று சொன்னார். ஆனால் ஹிட்லர் அதிகப் படியானகுடியேற்றநாடுகளுக்குச்சத்தமபோடலாம் அதுஒன்று தான் வழியுள்ளது. அந்த ஒப்பந்தக்காட்சி மிகவும் கெளிப் படையாய் இருக்கிறது. ஆக சண்டை எதிர்பாரா வகையில் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் ஏற்படலாம், அந்த சந்தர்ப்பம் வரும்பொழுது சோவியத் நாடு மீண்டும் காலம் வாட்டும் என்று சும்மாய் இருக்காது.

சோவியத்தின் செய்கை அதாவது ஐரோப்பாவில் சண்டையா சமாதானமா என்பது மேற்படி காட்டில் சமீபத் தில் திருத்தி அமைக்கப்பட்ட பொருளாதார முன்னேற்றத் தைப் பொருத்திருக்கிறது. சோவியத்தானது பாஸிஸ் சக்தி களினால் மற்றவர்களின் கோபத்திற்காளாகும்படியான அனேக காரியங்களை தாங்கிக்கொள்ளும் பொழுது — அதா வது ஸ்பெயினிலும், சைனாவிலும் ஏற்படும் நிர்ப்பந்தங்களை தடுக்காமல் சோவியத்நாடு இருப்பது போன்ற கொடூரமான தூண்டுதல்கள் மூலம்-சோவியத் நாடானது தனது உலக புரட்சித்திட்டத்தை கைவிட்டு விட்டது என்றும், அது தனது குறுகிய தேசிய கன்மையைமட்டும் கவனிக்கிறது என்றும், இல்லை ஒருசமயம் மற்றவர்களுடன் சண்டைசெய்ய முடி யாதவாரு பலஹீனமாய் இருக்கிறதென்றும் மற்றவர்கள் கினைக்க ஏதுவாகிறது. ஆனால் உண்மை அப்படியல்ல. அவைகளை தீர்மானிக்க வேறுகாரணங்கள் உண்டு அதாவது காலம் சோவியத் நாட்டிற்கு சாதகமாய் இருந்துவருகிறது. காலத்தை தனக்கு பயன்படுத்திக்கொள்வது தான் சிறந்த அரசியல்வாதிகளின் கடமை. மற்ற நாடுகளுக்கும் இது

தெரியும். அதனால்தான் அவைகள் ரஷ்யாவை வெகு காலத்தை தனது சவுகரியத்திற்கு பயன் படுத்திவரும் செய்கையிலிருந்து வெளிப்படுத்த பலவந்தமாகத் தூண்டுகின்றன. ஏனென்றால் மூதலாளித்துவ நாடுகள் எல்லாம் பொருளாதார நிலையில் தொடர்ந்தார்ப் போல் சீர்குலைந்து வருகின்றன. சோவியத் நாட்டில் மட்டும் பொருளாதார நிலை ஒரே நிதானமாய் முன்னேறி வருகிறது. அதுதான் வெகு சோவியத் நாடு காலத்தை எதிர்பார்ப்பதின் நோக்கம். சிலர் நினைக்கலாம் சோவியத் நாடு உள்நாட்டு கலகத்தால் பலஹீனப்பட்டுள்ளது என்று. ஆனால் ஜப்பானும் ஜெர்மனியும் வெகு நுணுக்கமாய் சோவியத் நாட்டின் ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியையும் கவனித்து வருகின்றன. அப்படி கவனித்து வருவதன்மூலம் தங்களுக்கு சாதகமான சம்பவங்கள் நிகழ்ந்தால் அந்த சமயங்களில் சோவியத் நாட்டின்மேல் பாய முயன்று வருகின்றன. உண்மையாக ஏதாவது ஆபத்தான உள்நாட்டு கலகம் இருந்தால்—உண்மையில் சோவியத்நாடு பலஹீனமாய் இருந்தால்—ஜெர்மனியும் ஜப்பானும் இவ்வளவு நாள் காத்திருக்காது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை தங்களுக்கு பயன்படுத்திக் கொண்டு இவ்வளவு நாள் ரஷ்யாவின்மேல் பாய்ந்திருக்கும் இதையெல்லாம் ஒரு தடவைக்குப்பல தடவை யோசித்துத் தான் தங்கள் காடகங்களை வெகுதூரத்தில் நடத்திவருகின்றன. இந்த சமயத்தில் ஏதாவது சண்டையில் இறங்கும்படி சோவியத்நாடு தூண்டப்படாவிட்டால் இன்னும் ஒரு மூன்று வருடங்களில் சோவியத்தின் நிலை உலக வல்லரசுகள் எல்லாவற்றையும் சேர்ந்தார்ப்போல் தோற்கடிக்கக்கூடியதாய் இருக்கும்.

ஜெ. க. வேலன்.

"நானே குடும்பத்துக்குத் தலைவன்; வீட்டுக்கு மூதலாளி" என்று கூறுபவனை நான் அறவே வெறுக்கிறேன். "நானே தலைவன்; நானே அதிகாரி" எனக் கூற ஒருவனுக்கு என்ன உரிமை?

இங்கர்சால்.

முன்னேற்றத்துக்கு முதலாளி முட்டுக்கட்டை

(தோழர் வதிரி ஆ. கோவிந்தசாமி)

நம் நாட்டின் சமசமூக முன்னேற்றத்துக்கோ, தொழில் முன்னேற்றத்துக்கோ, முட்டுக்கட்டையாய் இருப்பது முதலாளி வர்க்கமே. எம் இலங்கையின் எப்பகுதியைப் பார்த்தாலும் முதலாளி வர்க்கத்தாலே தாக்கப்பட்டு வருவதாக காணப்பட்டு வருகிறது. இவ்வர்க்கத்திலே பல திணுசுகள் உண்டு. தொழில் முதலாளி, கோயில் முதலாளி, குடும்ப முதலாளி, பொன்கார்த்த பூசகமுதலாளி, வறிதே தானாகச் சூட்டிக்கொள்ளும் சுப்மா முதலாளி இவை போல்வன பிறவும் சேர்த்துக்கொள்ளலாம்.

இவர்களது தொழிலை இவர்கள் பேர்களே காட்டிக் கொடுப்பனவாகும். எப்பொழுதும் ஏழைத் தொழிலாளர்களைப் பிழிந்து பணத்தைச் சேகரித்துக் கொள்வார்கள். ஏழைகள் கல்வித்துறையிலோ பொருட்டுறையிலோ முன்னேற லாயக்கில்லாதவரென நினைத்து அவர்கள் செல்லும் கபாடங்களுக்கெல்லாம் தான் போட்டுப் பூட்டிவிடுகின்றனர். பாம்பைக்கண்ட கீரியைப்போலவும், பசுவைக்கண்ட புலியைப் போலவும் ஏழைகளைக்கண்டு கோபித்துப் பாய்கிறார்கள். தங்கள் பணத்திற்கு அடுத்தவன் எப்பொழுதும் பயப்பட வேண்டுமென்று படம்போட்டுக்கொள்கிறார்கள். இவர்கள் ஏழைகளை வருத்துவதைப் பார்க்க என்மனம் பதறுகிறது; வயிறெரிகிறது; இவர்களது அடக்குமுறைப்பாணம் என் னெஞ்சைப் பிளக்கிறது. இவர்களால் அடக்கி ஒடுக்கப்படும் ஏழைகளைக் கண்ணாற்பார்க்க கண்ணொளி மங்குகிறதே. ஒரு விதத்திலேனும் ஆறுதல் கிடைக்கவில்லையே. முதலாவதாகக் கோயில் முதலாளிகளை எடுத்துக் கொள்ளுவோம். கோயிற்கச்சேரியிலும் முதற்கோயில் மேளம்தான் தொடங்கி மற்றவைகள் தொடங்கவேண்டும். அதுபோலவே காமும் முதலிலே கோயில் முதலாளிகளிலே கைவைப்போம்.

இவர்கள் கொடுமையைச் சொல்வதற்கு ஆயிரம் காவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாதென்றால் எகனாவு படைத்த என்னால் எப்படி இயம்பமுடியும் என்றாலும் எனக்குத் தெரிந்த சிலவற்றை இங்கே எழுதுகின்றேன்.

ஏழைகளை வதைத்து இவர்கள் அவர்களிடமிருக்கிற பொருட்களை அபகரித்து உண்ணும் ஒருவித மனிதப்பூனைகள் என்பது தான் சொல்லுமுன்னரே வாசகர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். இவர்கள் ஒரு காணிக்குள் சென்று ஐந்து கட்டிடங்களைக் கட்டி அவைகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தெய்வங்கள் இருப்பதாகவும் அவைகளுக்கு வைரவர், காளி, வீரபத்திரர், முனிபாண்டி எனப்பல காமங்களையும் சூட்டிவைத்து இங்கே பெரிய அற்புதம் நடக்கிறது. வயிறு வருக்கு ஒரண்டி கோழி, அரிசி, வாழைப்பழம், வெற்றிலை பாக்குக் கொண்டுவந்து பூசைசெய்தால் எப்படிப்பட்டநோயும் உடனே வெய்யிலைக்கண்ட பனிபோல் பறந்துவிடுகிறது என்றும், உளருக்குள் அக்கதையைப் பரப்பியும் காளிகோவிலில் வியாழாச்சி என்ற பெண்ணை அமர்த்தி இந்த அம்மையில் காளி ஆவேசமாகிச் சோதிடம் சொல்லுகிறது; சூளிபம் எடுக்கிறது; இன்னும் பலவித அற்புதங்கள் செய்கிறதென்று பாமர மக்களை ஏமாற்றிப் பணத்தைப்பறித்து வயிறு கொழுக்கத்தின்று ஏப்பம் விடுகின்றனர் இந்த மனிதப் பூனைகள். இனிப்பணக்காரர்கள் பூசை செய்வதற்கென்று பணத்தைக் கொடுத்தால் தெரிந்த கலல மோதகம், பானையின் நடுப்பகுதியில் இருக்கும் சர்க்கரைச் சாதம், பழம், பத்திரபுஷ்பம் முதலியவற்றைக் கொணர்ந்து மிக ஆரவு—ன் கொடுக்கின்றனர். எழைகள் கொடுத்த பணத்திற்குச் சிறு துண்டு மோதகத்தையும், பானையின் அடிபாகத்தில் இருக்கும் கருகற் சாதத்தையும் கொடுக்கின்றனர். இவர்கள் இப்படிக் கொடுக்கும்போது ஏழைகள் அவர்கள் சன்னிதானத்திற் கிட்டிப்போய் விட்டால் எட்டிப்போங்கடாவென்று திட்டுகிறார்கள். என்னே! கோயில் முதலாளிகளின் சமதர்மம். ஏழைகளின் பணத்திற்கு அச்சில்லையா? இப்படியான கெஞ்சுசக்தியில்லாத வஞ்சகத்தோகிகள் இருக்கும் இடங்களில் உண்மையாகவே கடவுள் ஒருவர் இருப்பாரா? இருந்தால் அக்கடவுள் லஞ்சம் வாங்கிச் சேவையத்தை கடத்துகிறார் என்பது பெறப்படவில்லையா; ஆகவே ஏழைகளை கிக்கிப்பதுமல்லாமல் கடவுளையும் கிக்கிக்கும் இக்கக் கோயில் முதலாளிகளை மனிதர் என்பதா? அல்லது மிருகம் என்பதா?

இனி, தொழில் முதலாளிகளின் அக்கிரமத்தைச் சிறிது கவனிப்போம். ஏழைகளின் வயிற்றிலடித்து வயிறு வளர்த்துப் பணக்காராராவதே இவர்களின் தொழில். கைத்தொழிலாளரிடம் ஒரு ரூபாய்க்கூலி கொடுக்கக்கூடிய வேலையை வாங்கிக்கொண்டு நாற்பது சதம் கூலியாகக் கொடுக்கிறார்கள். தொழிலாளர்கள் ஏன் இப்படிக்கூலியைக் குறைக்கிறீர்கள் என்று கேட்டால் பொருட்களுக்கெல்லாம் விலை கூடிவிட்டது, வியாபாரம் இல்லை; ஆகையால் கூலிகூட்டிக் கொடுக்க முடியாது, அப்படி யல்லவென்றால் வேலையவிட்டுப் போங்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலே கொள் முதலைப்போல இரு மடங்கு லாபமடையக்கூடிய விலைக்கும் சில பொருட்களை விற்கிறார்கள். ஆனால் அவைகளுக்கும் மேற்படி கூலியே கொடுக்கிறார்கள். இனி இதுமட்டுமா! வேலைத் தலங்களில் மூன்று நான்கு உண்டியல்களையும் வைத்துக்கொண்டு ஒன்று கதிர்காமத்திற்கு அடுத்தது, சிவ ரொளி பாதத்திற்கு என்று இதற்கு ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் ஐந்து சதம் போடவேண்டும். அந்தத் தற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மூன்று சதம் போடவேண்டு மென்று இப்படியும் ஒரு பகுதியைத் தொழிலாளரிடம் பறித்துத் தங்கள் வீட்டு வேலைகளுக்குச் செலவிடுகிறார்கள். என்ன செய்வார்கள் ஏழைத்தொழிலாளர்கள்? இவ்விதம் கொடுக்காது போனால் வேலைக்கு வர வேண்டாமென்று தடுத்துவிடுவார்களென்றஞ்சி அவர்கள் விதித்தபடியே கொடுப்பார்கள். இந்த மூன்று சதம் ஏழைத் தொழிலாளர்களிடம் இருந்தால் அவர்கள் குழந்தைகளுக்குக் காலை உணவுக்குப் போதியதாய்விடும். ஏழை நோய்வாய்ப்பட்டு வைத்தியருக்குக் கொடுப்பதற்கோ அல்லது அனுபானம் வாங்குதற்குக் கூடவோ பணமில்லாது தவிக்கும் பொழுது முதலாளிமார் அங்கே சென்று "ஏய் இங்கேவா! நீ மெத்தக் கஷ்டப்படுகிறாய். நான் உனக்குச்சிறிது பணம் கொடுக்கிறேன். உலக ஒப்பாசாரத்திற்காக இன்று செய்ய வேண்டும். உன்னிடத்திலே ஒரு சிறிய காணி இருக்கிறதோ இல்லையோ? அதை எடாக எழுதிவிடு" என்று கேட்பார். அதற்கு அவர் சம்மதித்தால் 200 ரூபாய் பெறுமதியான காணிக்கு 25 ரூபாய் கொடுப்பார். இச்சிறு தொகையைப் பெற்ற ஏழை எத்தனை நாட்களுக்குச் செலவழிப்பது? வைத்திய நிபுணருக்கு வேண்டாமா இருபத்தைந்தில் இருபது. வேறிற வீட்டில் பிறந்தினதே ஆதாயம் என்பது போல் மாணாவஸ்தைப்படும் தருவாயிலேயே அங்கிருக்

ரும் பானை சட்டிக்குக் கூட வழி தேடும் வைத்தியப் பண்டிதர்கள் சும்மா விடுவார்களா? 20 ரூபாயும் வாங்கித்தானாகு வார்கள். மிகுதியான ஐந்து ரூபாயைக் கொண்டுதான் அனுபானமும் வீட்டுச் செலவும் பார்க்கவேண்டும். எத்தனை காட்களுக்கு இந்த ஐந்து ரூபாயைச் செலவழிப்பது? நான்கு காட்களிலே செலவாகிவிடும். மிகுதி நாட்களுக்குக் காற்றைத் தான் உட்கொண்டு உயிர் வாழவேண்டும். இப்படியே சில காட்கள் செல்ல நோயுமேறிச் சாகுந்தறுவாயில் இருக்கும் பொழுது முதலாளியார் அங்கே செல்வார். "ஏய் உனது நோய் மாறுவதாய் இல்லை. வைத்தியரிடமும் கல்ல மருந்து கொடுக்கச் சொன்னேன். நீ தப்புவது அருமையாம். இருந்தாலும் ஒரு பத்துப் பன்னிரண்டு ரூபாய் கொடுத்தால் ஒரு மருந்து கொடுத்துப் பார்க்கலா மென்று சொல்கிறார். இனி உனது பிள்ளைகளோ சிறுவர்கள் பின்னுக்குச் சீவிக்கும் வழி தெரியாதவர்கள். நான் இருக்கிறேன். உங்களை இவ்வளவு தூரம் காப்பாற்றி வந்தேன். இனியும் என்னால் ஆனதைப் பார்ப்பேன். என்னைப்பற்றி இன்னும் சொல்லுவது தற்பெருமையாகும். நீ ஈடாகத் தந்த காணியை எழுதிவிடு இன்னும் சிறிது பணம் கொடுக்கிறே" னென்பார். என்ன செய்வது பணத்திற்குப் பெரிய முடையாய் இருக்கிறது. ஏதோ தாருங்கள் என்று இன்னுமொரு இருபத்தைந்து ரூபாய்ப் பெற்றுக்கொண்டு காணியை அந்த ஏழை கொடுக்க வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போய்த் தன்னுடைய பொருள் வரவை கினைத்து மகிழ்வார் இந்த மூட முதலாளி. இனி ஏழை தற்செயலாக இறந்துவிட்டால் பெண்டு பிள்ளைகள் சீவியத்துக்குப் பெருங் கஷ்டப்படும்போது முதலாளியார் தமது தூர் எண்ணங்களை அவர்களிலே பிரயோகிப்பார். அதற்கவர் இடங் கொடாராயின் வீட்டை விட்டு வெளியே விரட்டுவார்.

இப்படியான ஏழைத் தொழிலாளரின் இரத்தத்தை விற்றுப் பண மதங்கொண்ட பித்து முதலாளிகள் இருந்தென்ன இறந்தென்ன? அவர்கள் மேலுலகத்துக்குப் போமளவும் ஓர் நோயாகவே இருப்பர். ஏழைகள் படும் கஷ்டத்தைச் சிறிதளவேனும் சிந்திக்காமல் தங்கள் வயிற்றை மட்டும் நிரப்பிச் சந்தோஷப்படும் இந்த அசடுகள் கோயில்களுக்கும் குளங்களுக்கும் சென்று தங்கள் பாவங்களை நீக்கும்படி கடவுளை வணங்குகின்றார்கள். ஆவர்களுடைய பாவத்துக்கு மன்னிப்புமுண்டா? அப்படி உண்டானால் ஏழை எத்தக் கடு

வுளை வணங்குவது? ஏழைகள் தங்களின் பிள்ளைகள் படிக்கிறதற்கோ, இல்லையேல், தங்கள் ஓய்வு நேரங்களை ஒழுங்காகக் கழிப்பதற்கோ ஒரு வாசக சாலை அமைக்கப் போகிறார்களா? அதற்கும் மூட்டுக்கட்டைகளாக நின்று தடை செய்கின்றார்களே. இது நானறிந்த அனுபவித்த மாபெரும் உண்மை. இற்றைக்கு நான்கு மாசங்கட்கு முன் எம்மூரில் ஒரு வாசகசாலை அமைத்தோம். அதில் மாசத்துக்கு இரு முறை பொதுக்கூட்டம் கூட்டிப் பேசியும் படித்து மிகவும் சந்தோஷத்துடன் வசித்தோம். இதற்கும் சில அசடுகள் மூட்டுக்கட்டைகளாக இருந்து எங்களைத் தடை பண்ணுகின்றன. அவற்றிலும் சிலவற்றைக் கூறிவிடுகின்றேன். மேற்படி வாசகசாலைத் திறப்புவிழாவிற்காக ஒருவரிடம் சென்று உங்கள் தீபத்தை (லைட்) ச் சிறிது நேரத்துக்குக் கொடுங்கள். கூட்டம் முடிந்ததும் கொண்டுவந்து தருகிறேன் என்று கேட்டேன். அதற்கு அவர் நீ சுயமரியாதை இயக்கத்திலுள்ளவன். வாசகசாலையும் அம்மரியாதையாளருடையது. அப்படியிருக்க நான் எப்படி என் தீபத்தைக் கொடுப்பேன் என்றார். அது என்னலம் மாத்திரம் கருதித் திறக்கப்படுவதல்ல. உங்கள் எல்லோருக்குமாகத் தானென்று நான் கூறினேன். எப்படித் தான் ஞாயமிருந்தாலும் வைதீகப் பொருட்கள் ஒன்றாவது சுயமரியாதைக்காரருக்குப் பயன்பட மாட்டாது என்று தர மறுத்து விட்டார். திரும்ப ஒரு சிறிய வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு எங்கள் விழாவை இனிது முடித்தோம். இங்கே குறுப்பிட்டவர் அறக்கணிந்து வீழ்ந்த ஒரு வைதீகப் பழம் பொருள்.

இது நிற்க, நான் ஒரு கடை முதலாளியிடம் வேலை கேட்டேன். நீ சுயமரியாதைக்காரன். நாங்கள் செய்யும் சோர்த்தங்களைக் கூட நிந்திப்பவன். ஆகையால் உனக்கு வேலை கொடுக்க முடியாது என்று அவர் ஒரு போடாகப் போட்டு விட்டார். என்னை வைத்திருந்தால் தங்கள் ஆசாடபூதித்தன்மையெல்லாம் சந்திக்கு வந்துவிடுமென்பதுதான் உள்ளடிப்பு. இவை மட்டுமா! இவைகளிலும் சிறந்த தொன்றுண்டு. அதனையும் சொல்லி விடுகின்றேன். மேற்படி வாசக சாலை அமைத்துள்ள தோட்ட முதலாளிச் சுயமரியாதைக் கட்சியார் கடவுள் இல்லையென்று சொல்லுகின்றார்களாம், ஆகையால் அந்த வாசகசாலையை அந்த இடத்தினின்று எடுத்து விடுங்கள் என்றார். அதற்கு நான் அது எனக்கு மட்டுமல்ல, இந்த ஊரிலுள்ள எல்லோருக்கும் பயன்படுதற்

காகவே உண்டாக்கினோம் என்றேன். இதனையும் கேட்டுக் கொண்டு வாசகசாலையை எடுத்து விடும்படி சட்டம்போட் டுக்கொண்டே வருகின்றார். பணக்கார முதலாளிகள் காட் டுக்குச் செய்யும் நன்மைகளைப் பார்த்தீர்களா? அந்த வாசக சாலை மழை வெய்யிற் காலங்களில் வழிச் செல்லும் ஏழை ஜனங்களுக்கு ஆறுதலளித்து வருகின்றது. அதைத்தானும் ஆலோசிக்கச் செல்வச் செருக்கு விட்டிலது. அத்தகைய சிறிய அற்ப தொண்டாற்றுவார்க்குத் தமது வாய்மொழி மட்டிலு மாயினும் உதவி புரியாத கபட காடகத் தொண்டர்கள் கோ டியிலும் நின்று தரிசனம் செய்ய முடியாத ஜாதி பிரித்துக் களின் ஆலயங்களிலே சுவாமிக்கு ஒரு தேர் அவர் செவிக ளைப் போழ்ந்து செல்லும் மணி, அவர் வெயில் மலையில் இல்லை நிழலில் உழாவுவதற்குப் பட்டுக்குடை முதலியவற்றை வழங்கும் வள்ளல்களாக மாறியிருப்பது புதுமையினும் புது மையே. ஔவையார் புகழ்ந்த முதலிய புலவர்கள் இவர் களைக் கண்டு கொண்டாலோ மூவேழுவள்ளல்களின் தொகை யைக் கூட்டிக் கொள்ளமலா விட்டு விடுவார்கள்? இம்மட் டில் எத்தனைக் காவியங்கள்; எத்தனை கலம்பகங்கள்; அந்தோ! அவைகளைப் பார்க்கும் போது பெற்றிலமே என் பது தான் துக்கம்.

இவர்களால் நம் நாடும் எழுகனும் முன்னேற்றமடைவ தற்கு வழி யுண்டாகி? இவ்விதமான கொடியர்கள் வாழும் காட்டைப் பார்க்கினும் கரும்புலி வாழும் காடு நன்று. ஆகை யால் எனது நேயர்கள் என்னை ஒரு போது காட்டிலே சந் திக்கலாமென்று வந்து ஏமாந்து விடாதீர்கள். கொடிய விலங்குகள் இவர்கள். இக்கொடிய முதலாளிகள். ஆதலே இவர்கள் வாழும் இந்தாடே காடாயிற்று. இவர்கள் ஒழிந் தாலன்றி நாடு உருப்படாது என்று மாத்திரம் கூறு கின்றேன்.

கூட்டுறவு வாழ்க்கை

(ச. வெ. ரா.)

நான் (கோவாப்ரேடிவ்) கூட்டுறவு சங்கங்கள் என்ற விஷயத்தில் ஆதியில் கொஞ்சம் அக்கரை கொண்டவனாய் இருந்தவன். சுமார் 25 வருஷத்திற்குமுன் கம்முடைய சென்னை மாகாண கூட்டுறவு மிஷ்ராயிருந்த கோழர் ராமச்சந்திராவும், இங்கு டிப்டிக் கலைக்டராக இருந்த கோழர் காராயணசாமி பிள்ளை அவர்களும் இங்கு கோவாப் ரேடிவ் பாங்கு ஸ்தாபனம் ஏற்படுத்த முதல் முதல் என்னி டமே வந்தார்கள். எங்கள் வீட்டில்தான் முதல் கூட்டம் கூட்டப்பட்டது. பங்கு புஸ்தகத்தைப் பார்த்தாலும் நான் நான் அதில் முதல் பங்குக்காரனாக இருப்பது தெரியவரும். அதற்காகப் பெரிதும் நானும் அந்தக்காலங்களில் உழைத்திருக்கிறேன். என்றாலும் இன்றைய நிலைமையானது நான் கோவாப்ரேடிவ் சொசைடிகளிலிருந்து சிறிது விலகி அலக்ஷிய அபிப்பிராயமுடையவனாக இருக்கிறேன். எனெனில் எங்கு பார்த்தாலும் கக்ஷியையும், ஸ்தாபனங்களையும் சுயநலத் திற்கு உபயோகித்துக் கொள்வதும் அவற்றின் உத்தேசங்க ளுக்கு விரோதமாக பணக்காரர்கள் அதில் ஆதிக்கம் செலுத் துவதுமாய் இருந்துவருவதேயாகும். கோழர் கணபதி ஐயர் அவர்கள் ஒரு சமயம் என்னிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது கம்முடைய நிலைமையானது இப்படித்தான் இருக்க முடியுமென்று குறிப்பிட்டார். அது மிகமிக உண்மையே தான். எனெனில் கம் நாட்டில் நிலைபெற்றுள்ள பல்வேறு விஷயங்களையும், சமுதாய முறைகளையும் அடியோடு மாற் றாமல் கம்முடைய ஜனசமூகத்திற்கு நன்மையைக் கொண்டு வந்து விடுவது என்பது சுலபத்தில் முடியாத காரியமாகும்.

ரஷ்யாநாட்டின் கூட்டுறவு முறைகளைப் பற்றி நான் பேசுவேன் என்று உங்களுக்குத் தலைவர் எதிர்பார்த்திருப்பார் னார். சர்வ விஷயத்திலும் ஐக்கியபாவமான கூட்டுறவு முறையானது சாத்தியப்படுமா என்று ஒரு காலத்தில் கருதி

இருந்தேன். ஆனால் எனது மேல்நாட்டு சுற்றுப்பிரயாண அனுபவங்களினால் அதிலும் குறிப்பாக சுவிட்சர்லாந்தின் கூட்டுறவு முறைகளை நேரில் கவனித்துப்பார்க்க நேர்ந்தபின், கூட்டுறவு முறையைப் பற்றிய எனது ஆசை சாத்தியமாகக் கூடியது தான் என்ற எண்ணம் மிக்கப் பலமாக உறுதிப்பட்டது.

என்னைப் பொருத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக்கொண்டிருந்த போதிலும் எனது முடிவான லக்ஷியம், அதாவது எனது எண்ணம், ஈடேறுமானால் அது உச்சஸ்தானம் பெற்ற உயரிய கூட்டுறவு வாழ்க்கை முறையாகத்தானிருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

கூட்டுறவு என்கிற கொள்கையானது உயரிய சரியான முறையில் நம்முடைய நாட்டில் ஏற்பட்டுப்போனால் ஜனசமூகமானது கவலையற்று—சஞ்சல மற்று நாளைக்கு என் செய்வது என்று ஏங்கி தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையற்று நிம்மதியாக—சாந்தியாக—திருப்தியுடன்—குதூகலமாக வாழ வழி ஏற்பட்டுவிடும்.

நம்முடைய நாட்டில் எதாவது ஒரு சங்கம் ஏற்பட்டால் அதைப்பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்களென்றால் அதில் தங்களுக்கு எவ்வளவு தூரம் லாபமிருக்கிறதென்றும், அதைத் தங்கள் பெருமைக்கும், வசதிக்கும் எவ்வளவு தூரம் (சுயநலத்திற்கு) பிரயோஜனப் படுத்திக் கொள்ளலாமென்றும் தான் கருதிக்கொண்டு அதில் சம்மந்தம் வைத்துக்கொள்ளுகிறார்களே ஒழிய அதனால் உலக நன்மைக்கு ஜனசமூக நேம்பாட்டிற்குப் பாடுபட வேண்டுமென்பதைப்பற்றிய பொறுப்பையும், கவலையையும் அறவே விட்டு விடுகின்றார்கள்.

அதுபோலவே நம்முடைய (கூட்டுறவு கோவாப் ரேடிவ்) ஸ்தாபனங்களிலும் இருந்து வருகிறது. அந்த ஸ்தாபனத்தில் உள்ள மக்களுக்குள்ளாகக்கூட கூட்டுறவு உணர்ச்சி கிடையாதென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆகவே ஏதோ சிலர் தங்களுடைய கண்மைக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும், கௌரவத்திற்காகவும் ஏதோ சிறிது சம்பந்தம் வைத்திருப்பதினால் மாத்திரம் என்ன பலன் ஏற்பட்டு விடும்?

சாதாரணமாக இந்த ஊர் கூட்டுறவு ஸ்தாபனங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றில் 4000, 3000 பேர்கள்

வரை பங்குதார மெம்பர்களாக இருந்து வருகிறார்கள். இந்த ஸ்தாபனத்தினால் உருப்படியாகப் பொதுமக்களுக்கு என்ன கன்மை ஏற்பட்டு இருக்கிறது? ஏதோ ஒரு சில சொற்பப் பேர்கள், தங்கள் சொக்கத்திற்கு எப்படிக் கடன் பெறலாமென்று பெருத்த பிரயாசை எடுத்துக் கொள்பவர்களே சில அனுகூலங்கள் அடைகிறார்கள். மற்றபடி இவர்களுக்கு ஷே ஸ்தாபனத்தைப்பற்றிய கவலையே இல்லை. இன்றைய உலக எல்லா வாழ்க்கையும் இப்படித்தான் இருக்கிறது. வெறும் குற்றத்தையே பேசுவதால் பயனில்லையானாலும் இவைகள் தக்க படிப்பினையாக இருக்க உதவ வேண்டுமென்று கருதியே பேசுகிறேன். கூட்டுறவு வாழ்க்கையென்றால் பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது, எவ்வாறு உதவுவது என்கிற விஷயங்களே நமது வாழ்க்கையின் முக்கிய லக்ஷியமாய் இருக்க வேண்டும். வாழ்க்கை என்பது தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பது கூடவே கூடாது.

சாதாரணமாக நாம் கம்மிடையே ஒருவனை புதிதாகக் கண்டால் அதாவது சந்தித்தால் அவருடைய ஸ்திதி என்னவென்றும், உத்தியோகம் என்னவென்றும் விவர ஆசைப்படுகிறோம். அவர் ஒரு பெரிய உத்தியோகஸ்தராகவோ, பணக்காராராகவோ இருந்தால் அதற்காக ஒரு தனி மதிப்பும், ஒரு குமாஸ்தாவாகவோ, கூலியாகவோ இருந்தால், அதற்காக ஒரு தனி மதிப்பும்தான் கொடுக்கின்றோம். இதுதான் நம்முடைய நாட்டில் ஒரு மனிதனை மதிப்பதைப்பற்றிய முறையாகும். ஆனால் ரஷியாவிலோ இந்த மாதிரி இதுபோன்ற கேள்விகளை அங்கு யாரும் கேட்பதில்லை. அங்கு ஒருவருடைய உத்தியோக அந்தஸ்தைப் பற்றியோ, செல்வத்தைப்பற்றியோ சிறிதும் யோசிப்பதே இல்லை; விசாரிப்பதுமில்லை. அவற்றில் ஒருவருக்கொருவர் வித்தியாசமும் இருக்காது. ஆதலால் அங்கு அக்கேள்விக்கு இடமே இல்லை. மற்றப்படி என்ன கேட்பார்கள் என்றால் ஒருவனைக் கண்டதும் அவன் (Social service) சமூகசேவை என்ன செய்திருக்கிறான்—செய்கிறான் என்று மட்டுமே தான் பிரதானமாகக் கவனிப்பார்கள். அதைத்தான் கேட்பார்கள். ஒருவர் பிறருக்கு என்ன கன்மை புரிய ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதுதான் மனிதனை அறிய முக்கிய தத்துவமாகும். அதுதான் அங்கு அவனுடைய பெருமையைக் காட்டுவதாகும். அங்கு உத்தியோகத்தைப்பற்றிய பேச்சோ, மருமானோ, மேல்

கீழ் வரும்படி என்பது போன்ற பேச்சோ, எங்கும் எவ்வித ரூபத்திலும் கிடையாது. அங்கு எங்கும் யாவரும் சமுதாய வேலை செய்வோரேயாவார்.

நான் ரஷியாவில் இருந்த காலத்தில் ஒரு நீயாய ஸ்தலத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ஒரு குற்றவாளியை விசாரிக்கக் கண்டேன். அவன் ஒரு விசேஷ நாளில் குடித்து வெறியனாகி கலகம் செய்தான் என்பதாகக் குற்றவாளியாக்கப்பட்டவன். இவனை அந்த விசாரணை ஸ்தலத்தில் என்ன கேள்வி கேட்டார்கள் என்றால் உன்னுடைய Social Srevice work (சமுதாய ஊழிய வேலை) என்ன என்பதேயாகும், அவன் அதற்கு எனக்கு Social Service (சமுதாய வேலை) இல்லை என்றான். இதைக் கேட்டதும் நீதிபதியும், ஜூரியான ஒரு பெண்ணும் "உனக்கு சமுதாய வேலையில்லாமல் போய்விட்டது என்கிறாயே, வெட்கமில்லையா? உன்னை உலகுக்கு உபயோகப்படுத்திக்கொள்ள வகையற்றவனாக இருக்கிறேன் என்று சொல்லுவது அவமானகரமானதாகத் தோன்றவில்லையா?" என்று கடிந்தார். அதற்கு அவன் எல்லா சோவியல் சர்வீசையும் சிறு பிள்ளைகளாகிய கம்சமால் கூட்டத்தார் எடுத்துக் கொள்ளுகிறார்கள், நான் என்ன செய்வது?" என்றான். அந்தப்பையன் வெட்கம் வெட்கம் என்றான். இவைகளைக் கேட்ட பிறகு தான் சோஷியல் சர்வீஸ் [Social Service] என்பதைப் பற்றி அதிகம் அறிய ஆசைகொண்டேன். அதன் பயனாய் ரஷியர்கள் சமூக ஊழியம் செய்வது தான் தங்கள் வாழ்க்கையின் மேலான லக்ஷியம் என்பதை முதலாகவும், அடுத்தபடி கூட்டுறவு வாழ்க்கையே மேலான வாழ்க்கை என்பதாகவும் அவர்கள் கருதி இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

ரஷ்யர்களுடைய வாழ்க்கையானது உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் Social Service சும் கூட்டுறவு வாழ்க்கையை கடைத்தேறுவதற்கு நிற்பதுமேயாகும். அவர்கள் வாழ்க்கையில் மேற்போட்டுக்கொள்ளும் இந்த வேலையானது மனித சமூகத்துக்கு கவலை, துன்பம், மனச்சோர்வு என்பவைகளே இல்லாமல் செய்து விடுகிறது. அப்படியுள்ள சர்வ ஜனங்களுடைய எண்ணமெல்லாம் பிறருக்கு நாம் எவ்வளவு தூரம் நன்மை செய்யலாம் என்பதேயாகும். இந்த நோக்கமில்லாத மனிதனை மனிதனல்ல என்று வன்மையாக அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் உத்தியோகத்தின் பேராலும் மற்ற பதவிகளின் பேராலும் மாதம் 1-க்கு 100, 2000, 5000, 10000 ரூபாய்கள் கொள்ளை கொள்வது போன்ற கொடுமைகள் ரஷ்யாவில் கிடையாது. அங்குள்ளவர்களுக்கு தனக்கு வேண்டிய அளவுக்கு மேல் வரும்படி-லஞ்சம்-லாவணம் என்பன போன்றவைகளே அடியோடு கிடையாது. அங்கு தனிப்பட்டவர்களுக்குள் ரூபாய் 10, 5 கூட கடன் கொடுக்கும் முறையோ, கடன்படும் முறையோ கிடையாது. அதுகூற்றமான முறையே யாகும். எல்லாம் கூட்டுறவின் மூலம்தான் கடைபெற வேண்டும்.

ஆனால் அந்த முறைகள் எல்லாம் நம்முடைய நாட்டின் இன்றைய நிலைமைக்கு சாத்தியமில்லை என்று சொன்னாலும் நம் நாட்டு நிலைமைகளைபெல்லாம் அடியோடு மாற்றி அமைத்துத்தான் ஆகவேண்டும். இக்கருத்தைதத் தான் நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். இது சிறிது சிறிதாய் கோவாப் பரேடிவ் ஸ்தாபனங்களின் மூலமே ஓழுங்காகச் செய்யலாம்.

நம்முடைய நாட்டில் அளவுக்கு மீறிய செல்வச் செருக்கு கொண்டவர்களையும், கஞ்சத்தனம் படைத்த கனத்த மூதலாளிமார்களையும் ஒரு பக்கத்தில் வெகு பந்தோபஸ்தாக வைத்துக்கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களையும், பிச்சைக்காரர்களையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கிறது? இது போன்ற நிலைமை ரஷ்யாவில் இல்லையே! சுயநல ஆதிக்கக்காரனுக்கும்—ஆதிக்கத்திற்கும் கொஞ்சமாவது இடமிருக்கிறவரையிலும் தொல்லைப்படுகிறவர்களும்—தொல்லையும், தரித்திரமும், ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

இன்று காலை முதல் மாலை வரையிலும் என்னிடம் 5, 6 பேர்கள் வரைவந்து "வேலை கொடு-வேலை கொடு" என்று வருந்தினார்கள். ஒவ்வொருவருக்கும் மந்திரிகள் கலைக்டர்கள் தாசில்தார்கள் ஆகியவர்களுக்கு சிபார்சு கடிதம் எழுதித் தரவேண்டுமாம். ஒருவர் தனது "குழந்தைகளுக்கு அம்மை போட்டிருக்கிறது, சம்சாரத்திற்கும் பிரசவ நோவு. நான் என்னசெய்வேன்? 4 மாதமாக வேலையில்லையே காப்பாற்றுவாரில்லையே!" என்று கதறினான். நான் அவருக்கு 2 படி புழுங்கள் அரிசி கொடுக்கும்படி வீட்டிற்கு சீட்டுக்கொடுத்தேன். இதுபோன்ற கொடுமைகளின் தன்மையை

இன்று என்னுடன் தங்கியிருந்த கண்பரும் கன்கறிவர். எங்கும் வேலை இல்லை என்ற கூச்சுரல் அதிகரித்து விட்டது. ஏன் வேலை இல்லாமல் போய்விட்டது? வேலை இல்லாமை எப்படி ஏற்படும்? என்று யோசித்துப்பாரத்தீர்களா? ஒரு வேலைக்காரன் காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை வேலை செய்கின்றான். ஒரு தையல்காரன் 3-மிஷின்களை வைத்துக்கொண்டு இரவெல்லாம் வேலை செய்து ஒரு காளைக்கு 5-ரூ, 15-ரூ சம்பாதிக்கின்றான் என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்தப்படி ஒருவன் அதிக நேரம் வேலைசெய்து அதிகப் பணம் ஒருவனே சம்பாதிப்பது எதற்கு? இவைகளையெல்லாம் கணக்குப்போட்டு ஒரு ஒழுங்கு முறைப்படுத்தி வேலைகளையெல்லாம் ஒரு கூட்டுறவு முறையில் அமைத்தால் அவரவர்களுக்குப் போதுமான அளவுக்குக் குறையாமல் ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக போதிய பலன் கிடைக்கும்.

நம்முடைய நாட்டில் அடிப்படையான முதல் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் நாம் என்ன கதிக்கு ஆளாக வேண்டிவரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் செலவழிப்பதிலும் வகை தகையற்ற முறையில் வீண் செலவு செய்து வருகின்றோம். நமது வாழ்க்கையைக் கூட்டுறவு முறையில் நடத்தினால் இன்றைய நமது செலவில் எட்டில் ஒரு பாகம் தான் செலவு எற்படும். பாக்கி இன்னும் 8-பேருக்கு உதவும்.

உதாரணமாக ரஷ்யர்களின் சாப்பாட்டு முறையைக் கவனியுங்கள். அங்கு சாப்பாடும் கூட்டுறவு முறைதான். அங்கு ஒரு இடத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு நாற்பதினாயிரம் பேர்கள் சாப்பிடுமிடத்தைக் கண்ணுற்றேன். ஆனால் இங்குள்ள நிலைமை என்ன? ஒரு வீட்டில் சமையல் செய்வதென்றால் தேவைக்குமேல் அதிகமாய்த்தான் போட்டுச் சமைக்கிறார்கள். 4-5பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு பெண்ணை கண்டிப்பாகச்சமையலுக்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொருகுடும்ப சமையலுக்காக என்று ஒரு தனி அறையும், பாக்கி வசதிகளுக்கென்று வாளமான அறைகளும் இடமும்ஒதுக்கிவைத்துக்கொண்டு எவ்வளவு அக்கிரமமான தீங்குகளை வசதியற்ற எளியவர்களுக்குக்கூட உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஷியாவிலுள்ள மேற்சொன்ன பொது சமையல் சாலையில் (General Kitchen) 970 பேர்கள் தான சமையல் வேலையி

லீடுபெட்டிருக்கிறார்கள் என்று நான் கணக்குக் கேட்டுத் தெரிந் தேன். நம்முடைய நாட்டிலோ 4-பேர்களுக்கு ஒரு பெண் வீதம் சமையலுக்கு ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிற கணக் குப்படி 40000 பேர்களுக்கும் எத்தனை பெண்களை ஒதுக்கித் தள்ளிக் கொடுமைகளாக்கி வருகிறோம் என்பதை யோசித்துப் பார்க்கும்படி கோருகிறேன். நம்முடைய சமையலைப்பற்றி ஏதா வது பந்தோபஸ்து உண்டா? சமையலறையையும் சாப்பாட்டுச் சாமான்களையும் சமைத்த பிறகும் அங்கு தினம் டாக்டர் சரி யானபடி பரிசோதனை செய்கிறார். ஒரு பெரிய எம். டி. டாக்டர் பரீக்ஷைக்கென்றே ஒவ்வொரு கூட்டுறவுசமையலுக்கும் உண்டு. இங்கு நாம் என்ன செய்கிறோம்? சல்லீசான சாக்கு களை வாங்கிப்போட்டு வெந்தும் வேகாமல் அவித்துத் தின்று, சாப்பாட்டின் காரணமாகவே பொறும்பாலும் நோய் அடைகின் றோம். மேல்நாட்டு வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டக்குறைவு, அவ்வளவு சுலபம், பணம் மிச்சம், சுகாதாரம், சௌக்கியம் ஆகியவை கள் கவனிக்கப்படுகிற தென்பதை யோசியுங்கள். அங்கு ஒரு பொட்டிக்கடங்கில் (Bakery) கால் ஒன்றுக்கு 250 டன் பொட்டி கள் ஒரே சாலையில் செய்யப்படுவதைப் பார்த்தேன். கூட்டுறவு முறையினால் ஒருகால் ஒன்றுக்கு ஒரு இடத்தில் இருபதினாயி ரம் முப்பது ஆயிரம் வீதம் ஷர்ட்டுகள் டிரௌசர்கள், ஜாக்கட்டு கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு உள்ள அத்தனை பேரும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். அங்கு வேலையில்லாத வர்களே கிடையாது.

இங்கு நாம் துணி வாங்கிக் கொடுத்தால் காலை அரைக்கால் பாகம் திருட்டுடன் சேதமாகிற தென்றும் சொல்லலாம். அங்கு அப்படியில்லை. துணியை அப்படியே 200, 300 வீதம் மடிப்பு மடித்து முதலிலேயே சின்ன சின்ன வேலைக்காரனவர்களுக்கு அதாவது பாக்கெட், கழுத்துப்பட்டை கைப்பட்டை முதலான வைகளுக்கு நம்பத்தில் அறுப்பது போன்ற மிஷினில் அறுத்து எடுத்துக்கொண்டு பாக்கியை அப்படியே சேதாரம் இல்லாமல் முழுதும் மற்ற பாகங்களுக்கு உபயோகப்படுத்திவிடுகிறார்கள்.

அங்கு ஷிபாவில் 2,000—3,000 ஜனங்கள் சந்தோஷ மாக—சௌக்கியமாக போதிய சுகாதாரத்தோடு ஒரே கட்டிடத் தில் நிரம்பி வாழ்வதைப் பார்த்தேன். இங்கு நம்முடைய ஒரு வீட்டை 4, 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கென்று எவ் வளவு அனாவசியமாக 3, 4 அடுக்கு மெத்தைகளுடன் கட்டு கிறோம்? அதில் பதி பாகம் நாம் உபயோகப்படுத்துவது

கூட இல்லை. அப்படி உபயோகப்படுத்தும் பாகத்தில் சுத்தம், சுகாதாரம் இருப்பதில்லை. நம்முடைய வீட்டை நிரப்புவது ஒழிந்துபோன மத்து, கெட்டுப்போன நாற்காலி, முறம், கூடை, கிழிந்துபோன பாயும், அலிந்துபோன தானிய குப்பைகளாலும் தான். இந்த மூட்டாள் தனத்திற்காகவா நாம் பெரும் வீடு வைத்துக்கொண்டு இருப்பது என்பதை யோசித்துப்பாருங்கள்.

அங்கு எப்படி வீட்டு வசதி முறை இருக்கின்றதென கேட்கலாம். சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும், சாதாரணத் தொழிலாளிக்கும் சுமார் 10-க்கும், 16 அடிக்கும் உள்ள ஒரே மாதிரி அளவு அறைதான். அங்கு ஒரே மாதிரி சாதிக்காய் பலகை கட்டிலுப், மேஜையும் சிறப்பாக இருக்கும். அங்கு ஒரு சிறு 8X6 உள்ள கக்கூசு நூற்றுக்கணக்கானவர்களுக்கு உபயோகப் படுகிறது. சோட்டியே கிடையாது. அதைப் பார்த்தால் அது கக்கூஸா என்று நாம் சந்தேகப்பட்டே போய் விடுவோம். அவ்வளவு சுத்தம். அதில் எவ்வித வாடையும் இருக்காது. அழுகு, ஒழுங்கான முறை எல்லாம் சேர்ந்திருக்கிறது. இந்த ஒரு வீட்டுக்கு 5 பேருக்கு ஒரு கக்கூசாக இருக்கிறது. அதற்கு எவ்வளவு இடம்? அப்படி இருந்தும் என்ன சகிக்கமுடியாத நாற்றம், கூகாராக் குலறவு? இங்கு 30 பேர்களுக்கு ஒரு சோட்டி வீதம் இருப்பானென்று நம்புகிறேன். இந்த 30,000 பேர்கள் உள்ள ஊரோட்டில் எத்தனை சோட்டிகள்? எத்தனை வீடு, தெருக்கூட்டுகிறவர்கள்? எத்தனை வேலைக்காரர்கள்? இப்படியிருந்தும் இங்கு அசுத்தம் அசுத்தந்தானே, என்றும் அசௌகரியமாகத் தானே இருக்கிறது. அங்கு கக்கூசுக்கு பக்கத்திலேயே படுக்கை அறை இருக்கும். அங்குள்ள முறை கஷ்டத்திற்கோ—நாற்றத்திற்கோ இடமில்லை வழியுமில்லை.

ஒவ்வொரு கூட்டுப்பண்ணை யிருக்கும் இடத்திலும், ஒவ்வொரு தொழிற்சாலை இருக்கும் இடத்திலும் ஒரு நல்ல Park நந்தவனம், சினிமா, விளையாட்டு இடம், டிராமா, சுகாதார வசதிச்சாலை எல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் உள்ள 5000 பேருக்கும், 10000 பேருக்கும் கூட்டுறவு முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு சம்பளம் ஒரே அளவுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. சம்பளம் போக மேல்கொண்ட மீதி லாபத்தை அந்தஸ்தாபன பொது ஜனங்களுடைய நன்மைக்கே உபயோகப் படுத்தப்படுகிறது.

கூட்டுறவு சிக்கனம்.

இங்கு ஒரு மனிதனுக்கு ஒரு வண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள் அதில் அவன் எப்பொழுதும் போய்க் கொண்டிருக்கிறானா? அதற்கு தினம் 10 மணி நேரத்திற்கும் மேல் தீனி போட்டு 3-மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான், 3-மணி நேரம் மாத்திரம் அது பயிப்பதனால் பாக்கி 7-மணி நேர கூலியும் செலவும் முதலும் வீணாகிறது. இப்படியே தான் ஒவ்வொரு விஷயத்திலும் தனிப்பட்டவர்கள் தன்மையால் நஷ்டங்கள் உண்டாகின்றன. அதேகமாய் நம்முடைய நாட்டில் தேசசெழிப்பும் அனுபவப் பொருளகளுற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்குகிறதா இல்லையா? அப்படி இருந்தும் மக்களின் கஷ்டத்திற்குக்காணம் என்ன? தனித்தனி, அவனவன் சுயநலம் என்னும் உணர்ச்சியே இதற்குக்காணம். எனவே இந்த உணர்ச்சி ஒழியவேண்டுமா வேண்டாமா? மனிதனுக்குக் கவலையற்றும், குறைவற்றும் வாழும் வாழ்வுதான் சிறந்தது. அதற்குக் கூட்டுறவுமுறையேதான் பெரிதும் தேவையானது.

நிற்க, இந்த ஈசோடு முனிசிபாலிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள் அது வாழ்க்கை சம்மந்தமான எல்லா விஷயங்களையும் மேல்கண்டபடி கூட்டுறவு முறையில் பூர்த்தி செய்விக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு பிரயோஜனமேற்படும்? எவ்வளவு செலவு மிச்சமாகும்? எவ்வளவு அனுகூலம்? எவ்வளவு லாபம்? எல்லாவற்றிலும் நன்மையேதான் ஏற்படும். அப்படிக்கிருக்க தனிப்பட்டவர்கள் நன்மைக்கு மாத்திரம் என்பதாக ஏன் ஒவ்வொன்றும் இருக்கவேண்டும்?

ஒரு சாப்பாட்டு விதியை பொதுவாக பல குடும்பங்களுக்குச் சேர்த்துவைத்து நடத்தினால் இரண்டணாவுக்கும் கீழாகவே நல்ல சாப்பாடு போடலாம். அது சத்துள்ளதாகவும், சுகாதார முறைப்படியும் இருக்கும். நம்வீட்டில் சமைல் என்னும் போல் சரிபாக சமான்கள் வீணாய்ப்போகிறது. நம் முடைய நாட்டில் என்ன பொது உணர்ச்சி இருக்கிறது? பொது சமயல்களில் டாக்டர் பரீக்ஷைசெய்து எவ்வளவு சௌகர்யமாக எத்தனை காரியங்களைச் செய்யலாம். இது போலவே வியாபாரத்திலும் கடையில் போய் செய்யும்போது கிராமக்குடியானவனிடம் 9-சாக்குப்போட்டு விட்டு 10 சாக்கு என்று பித்தலாட்டம் செய்வது எனக்குத் தெரியும். குடியானவரிடமிருந்து ஒன்றுக்கு

ஒன்றரையாய் எடுத்துக்கொள்ளலும் எனக்குத்தெரியும். இதை நானும் செய்திருக்கிறேன். நம்மிடம் நிறைந்திருப்பது பொய். சாக்கோ கலப்படம். உபயோகிப்பதோ மூக்கால் அளவுள்ள நிறைதான் இவைகளினாலெல்லாம் தனிப்பட்டவர்க்கு எவ்வளவு நஷ்டம்? இவையெல்லாம் கூட்டுறவுமுறையில் லக்ஷியம் கொண்ட ஜனத்தலைவர்கள் என்பவர்கள் என் Control செய்து அடக்கி தடுக்கக்கூடாது? ஒவ்வொரு தனிப்பட்டவனையும் "ஒன்று படுத்தி நீயும் வா எல்லோரும் ஒரு காரியத்தைச் செய்வோம். எல்லோரும் லாபம் பெறுவோம்" என்று என் கூட்டுறவு தன்மை பிரயோகிக்கக்கூடாது?

மனிதசமூக நல்வாழ்க்கைக்கு இம்முறைகள் என்றைக்காவது தலை தூக்கித் தான் ஆகவேண்டும். இதற்காக பொதுவுடமை வேண்டுமென்பதில்லை. பொதுவுடமை பேச்சே வேண்டியதில்லை. ஆனால் கூட்டுறவு தன்மையைக் கைப்பற்றினால் போதும். வட்டிவிஷயத்திலும் இங்கு பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. ஆனால் குடியானவன் விவசாய செலவுக்கு பணம் வேண்டுமானால் தனிப்பட்ட முதலாளியிடம் மாதம் 1-க்கு ரூ. 10-க்கு கால் ரூபாய் வட்டி வீதம் கடன் வாங்குவதென்றால் என்ன கொடுமை? ரஷ்யாவில் தனிப்பட்ட மனிதர் எவரும் லேவாதேவி செய்யக்கூடாது? ஒருவனுக்கு மற்றொருவன் 5-ரூபாய் கடன் கொடுத்தால் அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவ வேண்டாமா என்றால்—கஷ்டத்துக்காக வேண்டுமென்றால்—என்-எப்படி ஆபத்தும், கஷ்டமும் ஏற்படும்? என்பதுதான் அங்கு கேட்கப்படும் கேள்வி யாகும்.

ஜன சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும் நான் அதிகமாகச் சொல்ல வரவில்லை- இவைகளைத்தான் சொல்ல நினைத்தேன். இதற்கு மக்கள் தயாராகி விடவேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிடவேண்டும். பலருடைய நன்மைக்கும் என்றே கருதி வாழ்வில் இறங்கவேண்டும். இவற்றைச் சர்க்கார் செய்யவேண்டியதா? பொதுஜனங்கள் செய்யவேண்டியதா? என்பது ஆஸ்திகர்கள் விதி பெரிதா? மதி பெரிதா? என்று தர்க்கிப்பதை ஒத்ததாகும். இவ்விவகாரங்களில் வலுத்தவன், வாய்ப்பேச்சுக்காரன் தான் ஜெயமடைவான். சர்க்கார்தான் ஜனங்கள், ஜனங்கள் தான் சர்க்கார் என்பதை உணருங்கள். நமது சரீரத்தில் கஷ்

டம் ஏற்பட்டால் நமக்கென்ன வென்று இருப்போமா? அது போல் நமது பொதுஉணர்ச்சிகள் இருக்கவேண்டும். சிப்பியா னது திறந்திருக்கு பொழுது மழைஜலம் விழும்போதுதான் முத்தாகிறது. அதுபோல்தான் நமது உணர்ச்சிகள் பக்குவப் படுத்தி சரிப்படுத்தி வைத்துக்கொண்டு தயாராகவே இருக்கவேண்டும் அப்பொழுது கண்டிப்பாக பலன் ஏற்பட்டு விடும். நம்முடைய அபிப்பிராயந்தான் ஜனசமூக அபிப்பிராயம் என்று தன் நம்பிக்கையுடன் நாம் வேலை செய்யவேண்டும். நமது உடலில் தனித்தனித் தத்துவ இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்சுதல் [Injection] செய்ய வேண்டும். இது நம்மால் முடியுமா? என்று இருக்கக்கூடாது. கண்டிப்பாய் இது முடியக்கூடியதே.

நம்முடைய மக்கள் மடத்தனத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் முடியாது என்ற அறியாமை அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது. 1914-18 வருஷத்தில் நடந்த கொடிய மகா யுத்தத்தைக் கூடக் கேள்விப்படாத ரஷ்யர்கள் ரஷ்யாவில் இருக்கிறார்கள். இப்போதும் [Czar[ஜார் அரசன் இருந்து அரசாளுகின்றான் என்று கருதிக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டிகளும் அங்கு இருக்கத்தான் செய்கின்றார்கள். இதனால் எவ்வளவு அங்கு கூட்டுறவு தன்மை ஏற்பட்டாமல் போய்விட்டது? எப்படி காய்ந்த தீப்ந்த சருகில் அதிவேகமாய் நெருப்புத்தீ பற்றிக்கொள் ளுகிறதோ அப்படியே தான் அங்கு மதம் ஒழிந்து—கடவுள் மாய்ந்து—அரசர்கள் மண்ணாங்கட்டிகளாகி, செல்வான்கள் பணிக்கட்டிகளாகி, மழைபெய்தாலும், வெய்யில் அடித்தாலும் இவைகள் எல்லாம் கெடுவதுபோல் கெட்டு ஒழிந்து 16-கோடி ஜனங்களையும் கூட்டுறவு வாழ்க்கைக்காராகி விட்டது என் பதை நீங்கள் ஞாபகத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டு இந் நாட்டுக்கொடுமை, பஞ்சம், அநீதி முதலியவை ஒழிப்புக்குத் தைரி யங்கொண்டு கூட்டுறவு மூலம் போராடி உழையுங்கள். உங்கள் உணர்ச்சிகள் இவைகளுக்கு எப்பொழுதும் அனுகூலமாகவே இருக்கட்டும்- நீங்கள் வெற்றி அடைவது நிச்சயம்.

வாழைப்பழம்.

(புதுவைநாதன்)

பெரும்பாலும் நம் நாட்டில், வாழைப்பழத்தை அதன் மலிவின் காரணமாகவும், எப்பொழுதும் கிடைக்கக்கூடியதினாலும், மற்றெல்லாப் பழங்களையும் விட கீழ்ப்படியிலேயே வைத்து அசட்டை செய்து வருகிறார்கள். காரணமென்னவெனில் அதன் முழுப் பலனையும் தெரிந்துகொள்ளாததேயாகும்.

வாழைப்பழத்தின் உண்மைப் பயனை உணர்ந்து ஆராய்ந்து பார்த்தால், அதைப்போன்ற பலவித உயிர்ச் சத்துக்கள் நிரம்பப் பெற்றதும், எல்லா சத்துக்களும் ஒருங்கெய்தப்படாத மற்றப் பழ வகைகளைவிட, வெகு சுலபமாகக் கிடைக்கக்கூடியதும், மேற்சொன்ன எல்லா சத்துக்களும் நிரம்பப் பெற்றதுமான வேறொரு சிறந்த ஆகாரம் நமக்குக் கிடைப்பது அரிதினுமரிதாகும்.

ஈண்டுச் சிறிது இதன் சத்தைப்பற்றி ஆராய்வோம்:—

வாழைப்பழம் பழமைக்கும், புதுமைக்கும் ஏற்ற ஆகாரமாகும். அதில் பலவிதமான ஜீவசத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. இதில் (Albuminoide என்னும் முட்டையிலுள்ள வெண்கருச்சத்தும், (Fat) கொழுப்பு, (Sugar) சர்க்கரை, முதலிய சத்துக்களும், போதுமான அளவுக்கு (Salt) உப்புச் சத்தும் நிறைந்திருக்கின்றன; மேலும் அதில் உயிரை ஓம்பும (Phosophorus) கெந்தகம், (Iron) இரும்பு, (Calcium) சுண்ணாம்புச் சத்துக்களும், (Magnisium) எனும் உறுதியான சுத்த வெண்மை நிறத்தையுடையதும், காற்றின் சக்தியினால் கண் தெரிக்கும்படி ஒளி வீசி எரியக்கூடியதுமான உலோக சத்தும். (Potassium) எனும் ஓர்வித நச்சுச் சத்தும், இன்னும் தாவர சத்துக்கள் பலவும் நிறைந்திருக்கின்றன. குறிப்பாக இரும்பு, கெந்தகம், சுண்ணாம்புச் சத்துக்களே அதிகம்.

வாழைப்பழத்திலுள்ள இரும்பு சத்தினால் நமது இரு தத்திலுள்ள கெட்ட ரத்தத்தைப் போக்கியும், செம்மை பொருந்திய சுத்த ரத்தத்தை அளித்தும், அவயவங்களை நன்கு இயங்கச் செய்தும், இரத்த விருத்தியை உண்டாக்குகிறது.

கெந்தகசத்தினால் மூளையையும், முதுகெலும்பையும், அதின்று பிரியும் இருபக்க சிற்றெலும்புகளையும் வளப்பெற வளர்ச்சியுறச் செய்கிறது.

சுண்ணாம்பு சத்தினால் (Rachitisum) என்னும் எலும்பு வியாதியைப் போக்கி எலும்புகளைச் சரியான நிலையில் பொருந்தச் செய்கின்றது.

எந்தக் காலத்திலும் வாழைப்பழம் உட்கொள்வதால், பலம், உணர்ச்சி, ஊக்கம், ஆரோக்கியம் முதலியவற்றைப் பெற்று இன்பகரமான வாழ்க்கையை கடத்தலாம்; இதைப் பற்றி பின்பும் ஆராயப் புகின் நமது தேகத்திற்குத் தேவையான தாது விருத்தியையும் அளிக்கின்றது.

1935ம் ஆண்டில் ஐரோப்பியர் வாழைப்பழத்தை மேலும் மேலும் ஆராய்ச்சி கடத்தி (Vitamines) வைட்டமின்சத்துக்களும் நிறைந்திருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆயிலும் (Vitamine C) சத்தே அதிகம் என்று கூறியிருக்கிறார்கள.

மற்றும் பிரபலடாக்டர்களும், அறிஞர்களும் இதில் எல்லாவித (Vitamines A. B. C. D. E. etc.,) வைட்டமின் சத்துக்களும் ஏராளமாக இருக்கிறதென்று உறுதி கூறுகிறார்கள்.

வைட்டமின் என்பது மற்றெல்லா சத்துக்களையும் விட மேலானதும், இரத்தப் பெருக்கை உண்டாக்குவதிலும் (Anemie) சோலை, (Scorbut) கள்பட்ட வியாதிகள் முதலியவற்றைக் குணப்படுத்துவதிலும் தலை சிறந்த ஆகாரமாகும்.

வைட்டமின் (Vitamine) சத்தினால் இன்பெக்ஷன் (1nfection)எனும் கொடிய வியாதினின்று காப்பாற்றிக் கொள்ளலாம். வைட்டமின் (Vitamine B) நரம்புகளுக்கு

பலத்தையும் வைட்டமின் (Vitamine E) கால்சியம் சத்தை திரேகத்தில் தங்க வைப்பதற்கும், எலும்பு வியாதிகளைப் போக்குவதற்கும் உபயோகப்படுகின்றன.

வியாதியஸ்தர்களுக்கும், ஜீர்ண சக்தியற்றவர்களுக்கும் வாழைப்பழத்தை சிறந்த மருந்தாகவும், ஆகாரமாகவும் உபயோகப்படுத்தலாம்.

தினந்தோறும் நான்கு அல்லது ஆறு பழங்கள் வீதம் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் நாம் மேற்குறிப்பிட்ட எல்லா வித சத்துக்களையும் ஒருங்கே எய்தப்பெற்று திரோகாரோக்கியத்துடன் வாழலாம்.

இப்பழத்தில் பொதிந்து கிடக்கும் சத்துக்களை உணர்ந்த பிராஞ்சு (France) நாட்டவர்கள் தம் மக்கட்குழுவிற்கு (Comite Officiel de Propagande delabanane Feraugaise) என்னும் கமிட்டியின் வாயிலாகவும், பிரசாரம், விளம்பரம் முதலியவற்றாலும் பொதுமக்கட்கு அறிவித்ததின் பலனால் அவர் தம் நாட்டில் எத்தனை யெத்தனை டன் வாழைப்பழங்கள் ஆண்டுதோறும் அதன் குடியேற்ற நாடுகளிலிருந்தும், வேறு தேசங்களிலிருந்தும் இறக்குமதியாகின்றன வென்பதை இதனடியில் குறிப்பிட்டுள்ள விபரத்தைக் கொண்டு ஊகித்துக்கொள்ளலாம்.

1932-ம்	ஆண்டில்	27.332	டன்கள்
1933	,,	38.625	,,
1934	,,	51.327	,,
1935	,,	82.671	,,
1936	,,	121.154	,,
1937	,,	175.599	,,

1938-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 96.645 டன் வாழைப்பழங்கள் இறக்குமதியாகி இருக்கின்றன. அதில் 94.645 டன் பழங்கள் அதன் குடியேற்ற நாடுகளிலிருந்து வந்ததாகும்.

தமிழர் செய்யவேண்டிய வேலை.

(23-10-38-ந் தேதி "குடி அரசு" எழுதுவது)

தமிழர்கள் சமூக வாழ்வில் தமிழ் நாட்டிலேயே கீழ் ஜாதியாய் இழி ஜாதியாய் சூத்திராளாய்க் கருதப்படுகிறார்கள்.

தமிழர் தலையில் சுமத்தப்பட்ட மதங்களும் தமிழர்களை 4-ம் ஜாதி 5-ம் ஜாதி சூத்திர ஜாதி சண்டாள ஜாதி என்று சொல்லுகின்றன.

தமிழர்களுக்குள் புகுத்தப்பட்ட கடவுள்களும் தமிழ்ப்பெண்களிலேயே தாசிகள் இருக்கச் செய்வதோடு, அக்கடவுள்கள் இந்தத் தாசிகள் வீட்டுக்குப் போகும் உற்சவங்களும் கொண்டாடப்படுகின்றன.

தமிழர்கள் அறிவும் சமயத்தின் போல் மழுங்கச் செய்து மூடநம்பிக்கை, குருட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஆளாக்கப்பட்டு உலகிலேயே தமிழ் மக்கள் முதல் தர மூடர்களென்றும் காட்டு மிராண்டிகளென்றும் கருதும்படி செய்யப்பட்டு விட்டது.

தமிழன் செல்வ நிலைமையைப்பற்றி யோசிப்போமேயானால் ஆரிய முறை ஜாதிப்பிரிவு காரணமாகவே தமிழர்களில் 4ல் ஒரு பங்கு மக்கள் படிப்புக்கும் வைத்தியத்திற்கும் அறவே வழியில்லாமலும் உணவிற்கு அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழி இல்லாமல் கூலி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் உழைத்தே தீரவேண்டும் என்கின்ற நிலையில் தீண்டப்படாதவர்களாய் இருக்கிறார்கள். மற்ற 3 பாகத்தவர்களில் பெரும்பகுதியும் சரீரப் பாடுபட்டு உழைப்பதே அவர்களது கடமை என்கின்ற முறையில் கூலிக்கும் கூழுக்குமே பிறந்தவர்கள் என்கின்ற நிலையில் இருக்கிறார்கள். ஏதோ சிலர் தேனைக்குமேல் தேடத்தக்க நிலையில் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் தேநிலையைத் தங்கள் "ஜாதியை" உயர்த்திக் கொள்ளவும் தங்கள் தொழில் "இழிவு" மாற்றிக்கொள்ளவும் மேல் லோகத்தில் தங்களிடம் தேடிக்கொள்ளவும் சுயநல காரியத்தில் பரமார்த்தி ஒரு சோம்பேறிக் கூட்டத்தின் கல் வாழ்வுக்கும் உயர் நிலைக்கும் ஆதிக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டு விடுகிறது.

தமிழர் மேன்மைக்கு தமிழன் ஒரு சிறு உதவி செய்வதும் பொருளளிப்பதும் பிச்சையாகவும் ஈகையாகவும் தயவாகவும் கருதப்படுகிறது.

தமிழாவ்லாத சோம்பேறிகளுக்கு உதவிபளிப்பதும், பொருள் கொடுப்பதும் தமிழ் மக்களின் கடமையாகவும் மூழுக் கமாகவும் கருதப்படுகிறது.

சமுதாய வாழ்க்கைப் படியில் சரீரப் பியாசைப்பட வேண்டியது தமிழனின் தர்மமாகவும் கடமையாகவும், சரீரத்தால் பாடுபடாமல் அன்னியரின் உழைப்பிலும் பொருளிலும் வாழ வேண்டியது தமிழனல்லாதவனுடைய கடமையாகவும் கற்பிக்கப் பட்டு விட்டது.

உண்மைத் தமிழன் வேலை.

இதற்வகல்லாம் இன்னுறய ஒரு தனி மனிதனோ ஒரு குறிப்பிட்ட வகுப்பார்களோ பொறுப்பாளியல்ல என்றாலும் வேறு எந்த மனிதனாவது அல்லது வகாவது ஒரு காரணமாவது இருந்து தீரத்தானே வேண்டும்? அதைக் கண்டு பிடித்துத் தருத்திக் கொள்ளுவதனிட உண்மை தமிழனுக்கு இன்று வேறு வேலை என்ன என்று கேட்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

இக்கொடுமைகளுக்கும் குறைகளுக்கும் இழிவுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை குறைகூற முடியுமா? அல்லது பிரிட்டிஷ் அரசாங்கமே தமிழ்நாட்டில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டு விட்டால் இவை ஒழிக்கப்பட்டுவிடுமா?

அல்லது பிரிட்டிஷாருக்கு முன் இந்தியாவுக்கு வந்த மூஸ்லிம் அரசாங்கம் இக்கேடுகளுக்குக் காரணமாயிருந்தது என்றாவது சொல்லிவிட முடியுமா? அப்படியானால் மூஸ்லிம் ஆட்சி ஒழிந்து இன்னுறக்கு 200-வருஷங்கள் போல் ஆகின்றதே. இதற்குள் அக்கேடுகள் ஒழிந்திருக்க வேண்டாமா?

மூஸ்லிமும் பிரிட்டிஷாரும் இக்கேட்டிற்கு சிறிதாவது காரணஸ்தர்கள் என்றுசொல்ல எதாவது ஆதாரம் இருக்கிறதா? அவர்களது சமயங்களில் இக்கேடுகளுக்கு எதாவது கற்பித்தனை ஆதாரம் உண்டு என்றாவது காட்ட முடியுமா? அல்லது இன்று

பிரிட்டிஷாரும் முஸ்லிம்களும் எதேபோத 'சுயஆட்சி' புரியும் அவர்களது நாடுகளிலாவது நாம் மேலே கூறிய எதாவது ஒரு குறைகள் உண்டு என்றோ ஒரு வகுப்பை மற்றொரு வகுப்பு சமயத்தையோ பிறனியையோ சால்லிக்கொண்டு கொடுமைப் படுத்தி இழிவுபடுத்துவதாகவோ சொல்ல முடியுமா? என்பன வாகியவைகளை ஆராய்ந்து பார்த்தால் இக்கொடுமைகளை நமக்கு நாமே தேடிக்கொண்டு நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்ளுகின்றோம் என்பது நன்றாய்விளங்கும்.

ஆரிய மதமே காரணம்.

தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் இன்றைய மேற்படி இழி நிலைக்கு தமிழ் மக்களின் அறியாமையால் சுமத்தப்பட்டிருக்கும் இந்துமதம் என்னும் ஆரிய—"பிராமண' மதமே காரணம் என்பதாக சென்ற பத்தாண்டுகளாக கூறி வருகிறோம். எழுதி வருகிறோம்.

நமக்கு முன்னிருந்த | அனேக பழந் தமிழ் மக்களும் கற்றறிந்த பெரியார்களும் அந்நிய நாட்டு ஆராய்ச்சிக்காரர்களும் இதை எவ்வளவோ எடுத்துக் காட்டி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் சரித்திர ஆதாரங்களோடு எழுதியிருக்கிறார்கள்.

இன்றும் தமிழர் கலைகள், தமிழர்களின் பழைய காரிகத்தைக் காட்டும் ஆதாரங்கள், தமிழர்கள் தங்களுடைய பழந் சமயம் என்று சொல்லிக்கொள்ளப்படுவதின் உண்மைகள், நூல்கள் ஆகியவைகளும் நம் கூற்றை நன்றாய் விளக்கிக் காட்டக்கூடிய வைகளாக இருக்கின்றன.

மற்றும் தமிழ் மக்களிலேயே ஆரிய (இந்து) மதத்தை விட்டு வெளி வந்து வேறு மதத்தை தழுவின வாளமான தமிழ் மக்கள் மேலே குறிப்பிடப்பட்ட குறைகளையும் கொடுமைகளையும் இழிவுகளையும் ஒரு அளவுக்கு நீங்கப் பட்டவர்களாகி சமுதாயப் போட்டியில்—வாழ்வுப் போட்டியில்—சரி சம உரிமையாளராக வாழ்கின்றார்கள்.

ஆகவே தமிழன் சமுதாயத்துறையில் கீழ்மை அடைந்து இழிவு பட்டு நிற்கும் ஏழையாய் கூலியாய் வாழ்வதற்கும், கல்வித் துறையில் தற்குறிகளாய் மூடர்களாய் பாமர்களாய் இருப்பதற்கும், ஆட்சியல் துறையில் அடிமையாய் ஏவலாளாய் இருப்பதற்கும்

அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள "சாமண" மகமும், அதன் உதவியால் ஆதிக்கம் பெற்ற ஆரிய அரசியல் முறையுமேயாகும் என்பது நமது துணிபு.

முதற்கடமை.

தமிழ் மக்கள் இன்று தங்களை உண்மைத் தமிழரென்றும் கலப்படமற்ற தனித்தமிழ் ஜாதி (Race) என்றும் ஒருவன் சந்தேகமற கருதுவானாயின் அவன் உடனே தன் மீது சுமத்தப்பட்டிருக்கும்—தனக்கு எவ்வகையிலும் எப்போதும் சம்மந்தமிருந்திராததான, தன்னை (தமிழ் மனை) சூத்திரன் என்றும் சண்டாளன் என்றும் கூறும்படியான—சமயத்தை உதறித்தள்ளிவிட வேண்டியது முதற்கடமையாகும்.

அதேபோல் அத்தமிழ் மகன் தமிழ் நாட்டின் விடுதலையும், சுதந்திரமும், செல்வப்பெருக்கும் தொழில் மேம்பாடும்தான் தன்னுடையது என்றும், இவற்றிற்காக உழைப்பது தான் தனக்காக தமிழ் மக்களுக்காக தமிழ் நாட்டுக்காகச்செய்யும் தொண்டு, கடமை என்றும் கருதவேண்டும்.

இப்படிக் கருதாததாலேயே தான் தமிழன் இன்று முற்கூறப்பட்ட பல இழிவுகளுக்கு ஆளாகி நிரந்தர இழி மகனாய் இருக்க வேண்டியவனாய் இருக்கிறான்.

சுருங்கக்கூறின் தமிழன் என நிலைக்குக் காரணம் இந்து மதத்தினது தனது மதம் என்று கருதியதும், இந்திய பூமானையும் தன் நாடு (தேசம்) என்று கருதியதும் இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே மக்கள் தொண்டு தேசத்தொண்டு (தேசாபிமானம்) என்று கருதியதும், கருதி வருவதுமேயாகும்.

இந்து மதம் என்று சொல்லப்படுவதால் ஒரு வகுப்பாருக்கு மாத்திரமே மேம்பாடு தருவதாகும்.

இந்திய தேச அபிமானம் என்பது தமிழன் பல நாட்டானின் நலனுக்கு உழைத்து பல நாட்டாருக்கு அடிமையாய் இருப்பதே என்பதாகும்.

இந்த இரு நிலைகளும் அடியோடு அழிடாமல் தமிழனுக்கு விடுதலை—சுதந்திரம்—நன்மானம் என்பவை ஏற்படப்போவதில்லை.

தமிழ் நாட்டுத்தொழில் முறைகளை எடுத்துக் கொண்டோ மேயானால் அதுவும் தமிழனுக்கு பயன்படுவதில்லை என்பது விளங்கும்.

இரும்புத்தொழில் பம்பாய்க்காரர், பாரசீகக்காரர் உரிமை பெற்று பயனடைகிறார்கள்.

உலோகத் தொழிலையும் பம்பாய்க்காரன் ஷோலாப்பூர்கா ரன் உரிமையாக்கி பயனடைகிறான்.

துணித் தொழிலைப் பம்பாய், ஆமதபாத்காரர்கள் கைப் பற்றி பயனடைகிறார்கள். இந்த தொழில்கள் யந்திர உதவியி னால் செய்யப்படுவதையே இங்கு குறிப்பிடுகிறோம். அதனால் தமிழ் தொழிலாளிக்கு வேலையில்லை; தமிழ் மூதனாளிக்கும் லாபமில்லை.

மற்றும் லேவாதேவி தொழிலை எடுத்துக்கொண்டால் அதை பெரிதும் மார்வாடி காட்டானும், குஜராத்தி காட்டா னும், முல்தான் காட்டானுமே எகபோக உரிமையாக்கிக் கொண்டு திட்டிக் கொண்டு போகும் செல்வம் கொஞ்சமா? அவை எப்படிப் போகிறது என்பதைப் பார்த்தால் தமிழ்க் கவி கள், தொழிலாளர்கள் ஏழைகள் ஆகியவர்களின் செல்வம் கைகளைத் திருகிப்பிடுங்கிக் கொண்டுபோவது போல் மார்வாடிகள் கொண்டுபோகிறார்கள்.

பகற் கொள்ளை

மற்றும் தமிழ் வியாபாரிகள் ஏழைக் கிராமக்குடியான வனையும் சாமான்கள் வாங்கும் பாமர மக்களையும் ஏமாற்றி வஞ்சித்துத் தேடும் செல்வம் அத்தனையும் பகற் கொள்ளை— திவட்டிக் கொள்ளை என்று சொல்லப்படுவதுபோல கோடி கோடியாய் சித்தமாகாணத்துச்சூ வட்டியின் போல் கடத்திச் செல்லப்படுகிறது. அதன் பயனாக தமிழ் நாட்டில் உள்ள பெரும் பெரும் வர்த்தகர்கள் பிரமோச நிலைக்கு வந்து விட் டார்கள். மணல் வீடு சரிந்து மட்டமாவது போல் தமிழ் வியா பாரிகள் தினம் தினப்கடன்காரராகி, பாப்பராகி, இன்சால்வென்ட் ஆகித் தற்கொலை செய்து கொள்ளும் நாட்டை விட்டு ஓடிவ துமான நிலையில் இருந்து வருகிறார்கள். வியாபார நிலைய காரியஸ்தர் என்பவர்களுக்கோ, மாதம் 100 ரூ சம்பளம் வாங்

இனி குமாஸ்தாவுக்கோ, இன்று மாதம் 25 ரூ கொடுக்க வியாபாரிக்கு சக்தி இல்லை. மாதம் 7 ரூபாய்க்கும் 8 ரூபாய்க்கும் கணக்குப் பிள்ளைகள் தவிக்கிறார்கள். மூல்தானி—மார்வாடி—வீட்டுச் சமயல்காரன் மாதம் 90-ரூ சம்பாதிக்கிறான்.

கம்பளத் தொழிலும் பஞ்சாப் மாகாணக்காரன் கொள்ளைக்கு உதவுகின்றது. இதுபோலவே மற்றும் அநேகமாக சரீரக்கூலித் தொழில் போக மற்ற லாபம் தரும் யந்திரத் தொழில்கள் மூலைத்தொழில்கள் ஈண்பனவைகளில் எல்லம் பெரிதும் தமிழ்நாட்டல்லாதவர்களால் தமிழல்லாதவர்களால் கைப்பற்றப்பட்டு செல்வம் தேடப்பட்டு திரட்டிய செல்வமனைத்தும் தமிழ் நாட்டை விட்டு வெளிநாட்டிற்கு கடத்தப்படுகிறதுடன் தமிழனுக்கு விரோதமாயும் அவை உபயோகப்படுத்தப்படுகிறது. இத்தப்படி பாழாவதும் கடத்தப்படுவதுமான து மேல் நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன? அல்லது கிழ்நாட்டுக்கும் போனால் என்ன?

அரசியல் துறையிலும் நாம் (தமிழன்) வேறுநாட்டானுக்கே அடிமையாய் இருக்க வேண்டுமானால் அது மேல் நாட்டானுக்கு அடிமையானால் என்ன, வடநாட்டானுக்கு அடிமையானால் என்ன? மதவியத்திலும் தமிழன் தனது சமயம் அதாவது நான் வணங்கும் சமயத்தலை இழிவானவனல்ல என்கின்ற உரிமையும், வாழ்க்கையில் யாருடனும் எந்தப் போட்டியும் போடத் தனக்கு உரிமை உண்டு என்கின்ற உரிமையும் இல்லாத ஒரு அந்நிய சமயத்தையே சமந்து இனியவேண்டுமானால் அக்கிரமை இந்து (ஆரிய)-மதமானால் என்ன? இஸ்லாம் மதமானால் என்ன? கிறிஸ்தவ மதமானால் என்ன? புத்த மதமானால் என்ன? சீக்கமதமானால் என்ன?

தமிழனின் செல்வம் தானாகட்டும் தமிழ் நாட்டை விட்டு கடத்தித் தான் ஆகவேண்டுமானால் அதுமேல் நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன?

எனவே, தோழர்களே! இக்கட்டுரையில் இக்கருத்து சம்மந்தமான சில விஷயங்களை மட்டுமே வெகு சுருக்கமாகக் குறிப்பிட முடிந்தது. இன்னும் இதைப்பற்றி விரிவாகத் தக்க ஆதாரங்களோடு எழுதலாம். சிந்தித்துக் காட்டலாம். ஒவ்வொரு தமிழ் மகனும் இவைகளை கன்றாய்ச் சிந்திக்கப்பார்க்க வேண்டும். பார்த்த பின் ஆரியப்புரட்டு, வடநாட்டுப் புரட்டு ஆகியவை

சனில் இருந்து மனிதன் விடுதலையாக முயற்சிக்க வேண்டும். பாழும் தேசியத்தால் தமிழர்களாகிய நாம் 50 ஆண்டுகளை பாழாக்கிவிட்டோம். நாட்டையும் மக்கள் சமூகத்தையும் உண்மையாய் மேன்மையடையச் செய்ய முயற்சித்த ஒப்பற்ற பெரியார்களை நான்கிகன், தேசத்துரோகி, மக்கள் துரோகி, சுயநலக்காரன் என்றெல்லாம் வைது அவர்கள் பாடு பயன் படாத முறையில் செய்து விட்டோம்.

உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுப் பூசை செய்கிறோம். மலத்தை மணமாக முகருகிறோம். மானமிழந்தோம். பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம். மற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத்தானா தாழுண் உயிர் வாழவேண்டும்? எழுங்கள்! தன்மை எய்த்து ஆழுத்தி நம் தலை மேல் கால் வைத்து ஏறி மேலே போக வடநாட்டானுக்கும், தமிழால்லாதவனுக்கும் படிக்கல் ஆய்விட்டோம்.

இனியாவது தமிழ்நாடு தமிழருக்கே என்று ஆரவாரம் செய்யுங்கள். உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழனுக்கே' என்று பச்சை குத்திக்கொள்ளுங்கள். உங்கள் வீடுகள்தோறும் 'தமிழ் நாடு தமிழனுக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள். நம் வீட்டுக்குள் அன்னியன் புகுந்து கொண்ட தோடல்லாது அவன் நம் எஜமானன் என்றால் நமக்கு இதைவிட மானமற்ற தன்மை— இழி தன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்.

புறப்படுங்கள்! தமிழ் நாட்டுக்கு பூட்டப்பட்ட விலங்கை உடைத்து சின்னா பின்னமாக்குங்கள்.

தமிழ்நாடு தமிழருக்கே! தமிழ்நாடு தமிழருக்கே!!

தமிழ்நாடு தமிழருக்கே!!!

உண்மையை அறிவதே ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். பகுத்தறிவுப்படி நடந்தவன் ஒருவன் காணும் உண்மையினால் அவனுக்குத் தீமையுண்டாகவே செய்யாது; பகுத்தறிவை மீறினால் நிச்சயமாகத் தீமையேயுண்டாகும்.

இங்கர்சால்

நாஸ்திகமென்றால் என்ன?

சாதாரணமாக 'நாஸ்தி' என்றால் 'இல்லை' என்று பொருள். 'நாஸ்தி' என்பது வடமொழி. நாஸ்திகன் என்றால் இல்லை என்பவனைக் குறிக்கும். ஆனால் பழக்கத்தில் கடவுளை இல்லை என்பானை நாஸ்திகன் என்று அழைக்கின்றார்கள்; இவனை (Atheist) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். கடவுள் உண்டென்பானை ஆஸ்திகன் (Theist) என்று வழங்குகிறார்கள். ஆனால் வைதீகர்கள் (The Orthodox) தங்கள் மதத்தை நம்பாத மதஸ்தர்களை நாஸ்திகர் என்று சொல்லுகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாஸ்திகன் (Heretic) அதாவது நம்பாதவனென்று பொருள். ஆதலின் ஒரு மதக்கடவுளை நம்பாத மதஸ்தனாயினும், எந்த மதத்தையும் நம்பாத நாஸ்திகனாயினும் ஒருவருக்கொருவர் நாஸ்திகனே. சைவன், விஷ்ணுவை நம்புவதில்லை. வைணவன் சிவனை நம்புவதில்லை. இவர்களில் ஒருவனுக்கொருவன் நாஸ்திகனே. இவ்விருவர் கூறும் சிவனையும் விஷ்ணுவையும் சேர்த்து இரண்டையும் நம்பாதவனும், நாஸ்திகனே. எனவே நியமுறையில் நாஸ்திகன் என்றபதத்தில் யாதொரு இழிவுமில்லை. ஆனால் மதஸ்தர்கள் தங்கள் மூட வைராக்கியத்தாலும் (Bigotry) மூட துவேஷத்தாலும் (Hatred) நாஸ்திகர்களை இகழ்ந்தும், இடித்தும் வந்திருக்கின்றனர்.

கடவுளைத் தேடுவதுவயிற்றுப்பிழைப்பு.

'நான் எப்படிக் கடவுளைக்காண முடியும்?' என்ற உபதேசத்தை ஒரு பாதிரி சமீபத்தில் சொல்லித் தனது வெள்ளறிவை விளம்பரப்படுத்தி யிருக்கிறார். இதைப்பார்த்ததும் ஒரு குடை சர்வ சாதாரணமாக அடிக்கடிக் காணாமற் போவது போல கடவுளும் காணாமற் போய் விடுகிறாரே என்று காம் கினைக்கவேண்டி யிருக்கிறது. கடவுள் அல்லவா மனிதனைக் கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் அவரது வேலையாகும். அதைவிட்டுவிட்டு மனிதன் கடவுளைத் தேடுவதென்றால், அல்லதுகண்டுபிடிப்பதென்றால் ஒருக்காலும் முடியாத காரியம். ஆனால் இந்தத் தேடுகிறவேலையின் பெயரைச்சொல்லி வயிறுபிழைக்கிறவர்கள் வேண்டுமானால் கடவுளைத் தொலைத்துவிடவும், கண்டுபிடிக்கவும் முடியுமே தவிர மற்றபடி வேறுயாரும் தொலைக்கவும் முடியாது, கண்டுபிடிக்கவும் முடியாது. பாதிரிகளுக்கு இது சரியான உத்தியோகம்!

(ப்ரீதிங்கர்)

வைத்தியக் குறிப்புகள்.

(காலஞ்சென்ற டாக்டர் மதார் சாயபு)

——(3)——

நிலவாகைச் சமூலத்தை இடித்து தூள் செய்து சுமைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் ஆவின் நெய்யில் சாப்பிட உடம்பு பூரிக்கும். தேனில் சாப்பிட உடம்பு வற்றும். சிற்றாமணக்கெண்ணையில் சாப்பிட எலி கடிவிஷமும், சில்லரை விஷகடியும், ஏப்பமும், வெந்நீரில் சாப்பிட கிரிமியும், பசுவின் மோரில் சாப்பிட சமியாமையும், எருமைமோரில் சாப்பிட எலிகடி விஷமும், எருமைச் சாணிப் பாலில் பாண்டும், எருமைப் பாலில் பெண்கள் கைமசக்கும் தீரும்.

மேற்படி சமூலத்தை முன் சொன்ன முறைப்படி செய்து கொண்டு, முன்சொன்ன அளவின்படியே பாகவிலைச் சாற்றில் சாப்பிட உடம்பு தடிக்கும். செய்யான் விஷமும். மேனி இலைச் சாற்றில் தேள் விஷமும், ஆலம் பழுப்புச்சாற்றில் பெருச்சாளிகடி விஷமும், வேம்படம்பட்டைச்சாற்றில் செய் வட்டை கடியும், செமமறி ஆட்டு நீரில் அரணை கடியும், வீழிச் சாற்றில் விரியன்கடி விஷமும், தேகிப்பழச்சாற்றில் சர்வ விஷமும், பாகவிலைச் சாற்றில் கட்டுவாக்காலி விஷமும், அவுரியிலைச்சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன் குத்து, தவளை, குரங்கு, நாய், பிள்ளை, பேய் நாய், பேய்நரி, இவை களின் விஷமும், கையான்தகரை, கண்டங்கத்திரிச் சாற்றில் சுறை கடியும், கொடிக்கள்ளி சாற்றில் மாரல் சுரமும், குளிர் சுரமும், கல்லெருக்கிலையில் விக்கலும், வெள்ளாட்டு நீரில் குஷ்டம், சோகை, காமாலையும், பசுவின் நீரில் சாப்பிட சொறி சிரங்கு, உளைவு, பெருவயிறு, மகோதரம், நீராமை யும் நீங்கும். புளி புகையிலை சேர்க்கலாகாது.

வெப்பாலை சமூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம், சில் விஷம், காப்பன், வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

குளப்பாலை சமூலத்தைப் பாலிற்கொள்ள எலிகடி விஷ

மும், விஷகாப்பன், உடல் சுரப்பு, கால் சுரப்பு, சர்வ விஷகடி, வீக்கம், பருபடுவன் தீரும்.

முத்துருக்கஞ் செவி சமூலத்தைப் பாலிற்கொள்ள சிறிய முலை பருத்து விம்மும், காப்பன் சில்விஷம், சிலந்தி, பரு, பிளவை, புண் தீரும்.

ஆதளை மூலத்தை ஆவின் பாலிற்கொள்ள பதினெட்டு வகை எலிகடி விஷங்களும் நீங்கும். மேற்படி பாலை கொப்பளிக்க வாய் வேக்காடு வெட்டை தீரும்.

பூவரசு மூலத்தை பாலிற்கொள்ள சொறிசிரங்கு, விஷ பாண்டு, வீக்கம, சில் விஷம் தீரும்.

அறுகு மூலத்தைப் பாலிற்கொள்ள சகல விஷங்களும் தீரும். தேக பலமுண்டாகும். கரை திரை மாறும். காம்புகள் இறுகும். மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும்.

மேற்படி மூலத்துடன் மிளகு, சீரகம், அதிமதுரம், மசத்துளம் பூ, சமன்கலக்கு கஷாயம் செய்து அதில் ஆவின் வெண்ணெய் போட்டுக் குடிக்க, மேற்படி வியாதிகள் தீரும்.

அழுக்குராக்கிழங்கை பாலிற்கொள்ள விக்குகட்டும். மேனி காந்தியாகும். தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, காப்பன், பாண்டு, வெப்பு, வெட்டை, வீக்கம், கட்டி, பித்தக் கிருகிருப்பு நீங்கும்.

மேற்படி வேரை பாலில் அவித்துச் சுத்திசெய்து இடித்த தூள் விராகனிடை 64, இலவங்கம் விராகனிடை 1, சிறு காகப்பூ விராகனிடை 2, மிளகு விராகனிடை 3, திப்பிலி விராகனிடை 11, இவைகளைச் சூரணத்து ஒன்றாய்க்கலந்து சரி இடை சர்க்கரை சேர்த்துத தினகடிப்பிரமாணம் சாப்பிட கூடியம், இருமல், புகைச்சல், அரோசியம், தாது கஷ்டம் தீரும்.

மான் கிழங்கை பாலிற்கொள்ள மூலம், காப்பன், புண், சிலந்தி, வண்டுகடி, எரி குஷ்டம் தீரும்.

மேற்படி மான் வாட்டிப்பிழிந்து சிசுக்களுக்குக் கொடுக்க நெஞ்சிற் கபக்கட்டு, காப்பன், செங்கிராக்தி, கருங்கிராக்தி, தீரும்

சரக்கொன்னை மூலத்தைப் பாலிற்கொள்ள வணடுகடி, குஷ்டம், சொரி, தேமல், விஷநீர், வாதசூலை, வாதகாப்பன் தீரும்.

ஷை பூவையும், கொழுந்தையும் அரைத்து பாலிற் கொள்ள பிரமியம் வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம், விஷபாகவீக்கம் தீரும்.

வெடி பூவை எலுமிச்சம்பழச் சாற்றினால் அரைத்து உடம்பிற் தேய்த்துக் குளித்துவர சொறி, கரப்பன், தேமல், பத்து தீரும்.

ஆவரைப் பஞ்சாங்கத்தைப் பாலிற்கொள்ள நீரழிவு, பிரமேகம், ஆண்குறி யெறிவு நீங்கும்.

வெடி பஞ்சாங்கத்தையும், வெங்கயத்தையும், சிவக்க வதக்கி கஷாயஞ் செய்து அதிற் கோரோசனையை உரைத்துச் சாப்பிட இரத்தக்கடுப்புத் தீரும்.

வெடி வேர்ப்பட்டை, கல்லத்திப்பட்டை, மருதம்பட்டை, சாக்கொன்னைப்பட்டை இவைகளைச் சேர் நிறையாய்ச் சேர்த்து கஷாயஞ் செய்து அதில் கல் மதத்தை உரைத்துச் சாப்பிட நீரழிவு தீரும்.

காட்டாமணக்கு சமூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம், பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக்கட்டி, பெருவயிறு தீரும். மேற்படி முத்துப் பருப்பைப் பாலிற்கொள்ள விரோசனமாகும். கொடிக்கள்ளி மூலத்தைப் பாலிற்கொள்ள சோகை, பாண்டு, விஷபாகவீக்கம், கெண்டை, மகோதரம், வயிற்றுச்சூலை, கரப்பன், எலிகடி விஷம் தீரும். மேற்படி இளங்கொழுந்தை பட்டவித்து பிழிந்த சாற்படி அரைக்காலில் கொஞ்சம் மிளகுத்தூள் போட்டுச் சாப்பிட்டுவர மேற்படி வியாதிகள் தீரும். பத்தியம் மோர் அன்னம் சாப்பிடவும் விரோசனமாகும்.

மிளகு, மேற்படி கொழுந்து, வெள்ளெருப்பூ, இம்மூன்றையும், வகைக்கு ஒரு விராகனிடை வீதம் சிதைத்துச் சாப்பிட குளிர் சுரம், சுரம் தீரும். மேற்படி மருந்துடன் ஒரு களச்சிப் பருப்பு சேர்த்துக் கொடுக்க அண்டை வாயு தீரும்.

மாவலிங்க மூலத்தைப் பாலிற்கொள்ள சுரம், வெட்டை, சூலை, சுரோணிதக்கட்டு, மந்தவாயு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை புண், புரைகள், பிளவை, வீக்கம், வாதம், ஜன்னி, ருச்சை, கவ்வலடைப்பு, விஷகடி தீரும்.

மேற்படி பட்டை, மூங்கியிலை, சித்தாத்தை, சுக்கு, அரிசித்திப்பிலி, சதகுப்பை, கொடிவேலி வேர், இவைகளை ஓர் நிறையாய்ச் சிதைத்து ஒருபடி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து வேலை ஒன்றுக்கு மாகாணிப்படி வீதம் பனங்கருப்புக்கட்டி கூட்டி மூன்று நாள் சாப்பிட பிரசவ காலத்தில் தடைப்பட்டிருக்கும் சூதகத்தை உடைத்துவிடும்.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⊰(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமூசயவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
,,	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
,,	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''நான்காம் பதிப்பு'')	...	,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை?	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) 200 பக்கம்	0	5	0
11.	தர்மபுரீகை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சிறைத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
18.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
19.	சோஷியலிசம்	0	2	0
20.	போல்ஷ்விக் முறை	0	1	0
21	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	6
22.	சமதர்ம உபந்யாசம்	0	0	9
23.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
24.	மனுநீதி விளக்கம்	0	2	0
25.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
26.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
27.	புதுரஷ்யா (200 பக்கம்)	0	8	0
28.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரக்களுடன்	0	8	0
29.	கற்பு ஆட்சி	0	6	0
30.	ராவணப் பெரியார்	0	5	0
31.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
32.	நரகம் எங்கே?	0	2	0
33.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
34.	கலைக்கியாணம் அல்லது சுகவல்யம் கட்டுரை	0	5	0
35.	ஹரிஜன எதிர்ப்புப் பாடல்கள்	0	2	0
36.	கார்ல மார்க்ஸ்	0	2	0
37.	மனிதன் என்றால் என்ன?	0	6	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy
at the Unmaivilakkam Press, Erode.